திராவிட நாடு

2—2—58 | வார வெளியீடு | விலை 16 காசு


# இயற்கையே, எழு!

——[ கதி ]——

வாவிசூழ் தமிழகத்தின் வலிவெலாம் சிதைந்ததுவே!
வண்டமிழை அழித்திடவே வகுத்திட்டார் திட்டம்பல;
பூவிதழின் நறுமணத்தைப் புழுக்கூட்டம் அறிந்திடுமோ?
புரிந்திடுமோ வடவருக்குச் செந்தமிழின் இனிமையெலாம்?
தேவிகுளம் பீர்மேட்டைப் பறிகொடுத்து உளந்துடித்துத்
திகைத்தநமைப் பார்த்தரசு தேற்றவிலை; தூற்றியது!
தாவியோடும் காவிரியின் தண்புனலே! தகித்தெழுந்து
தறுக்கர்தமை அழித்தவாறே தமிழர்களை வாழ்விப்பாய்!

நிலைகெட்டு வீதியிலே உணவின்றி உடையின்றி
நித்தமிங்கு அலைந்தலைந்து சோர்வுற்று மக்களெலாம்
தொலைதூரம் கடந்தேகித் துடிக்கின்றார் கொடுமையினால்!
துய்க்கின்றார் எவரெவரோ நம்நாட்டின் இன்பங்களை!
விலைமதிக்க வொண்ணாத நல்வாழ்வு போனபின்னும்
வீணர்களாய் வீற்றிருத்தல் நம்மவர்க்கு அழகாமோ?
அலையெழுப்பும் திரைகடலே ஆர்த்தெழுந்து சினமுடனே
ஆதிக்கந் தளையறுத்து அமைந்திடுக நன்கடலாய்!

தென்னகத்தைச் சிறிதேனும் ஏறிட்டு நோக்கிடாது
தின்றுஉடல் கொழுக்குமொரு கும்பல்வாழ விட்டுவிடின்
இன்னல்பல நமைவந்து அடுக்குமென உணர்ந்துநீவிர்
இணைந்துகூடி முழக்கமிட்டு வென்றிடுவீர் வடவர்களை!
கன்னலிளந் தமிழ்மொழியைக் காத்திடவே இயற்கையெலாம்
கடுகிவந்து முன்னிற்கக் காதலினால் அழைக்கின்றேன்!
தென்பொதிகைத் தென்றலேநீ சீறியெழு தீக்காற்றாய்த்
தினவெடுத்து நமைநசுக்கும் தீயர்களை வாட்டிடவே!

# கேட்டீரா! சேதி!

"என். ஜி. ஓ."க்களுக்கு சம்பள உயர்வு தருவது பற்றி நிதியமைச்சர் சுப்ரமணியம் இந்தக் கிழமை வெளியிட்டிருக்கிறார். எவ்வளவு? எப்போது முதல்? — என்று, ஆவலோடு கேட்கக்கூடும். இனிமேல்! — அதுவும் நிதி நிலைமை சரியாகயிருந்தால் !!-செய்யப்படலாம் !!! எப்படி உறுதிமொழி? என். ஜி. ஓ. - க்கள், ஆண்டாண்டு காலமாக, தங்களுக்கும் மத்திய சர்க்கார் சிப்பந்திகளைப்போல் சம்பள உயர்வு தரப்பட வேண்டும் என்று போராடி வருகிறார்கள். அவர்கள் குறைகளைத் தீர்க்க, வழக்கம்போல் பாடப்படும் 'பணமில்லை' என்கிற பல்லவியையே இம்முறையும் நிதியமைச்சர் பாடியிருக்கிறார். நிதி நிலைமை சரியானால், சம்பள உயர்வு பற்றி, வரும் ஆண்டில் கவனிக்கும் உத்தேசமும் அவருக்கு உண்டாம் !! தெரிவிக்கிறார் !!

*

"பணமில்லை," என்று பாடுகிறார்கள். ஆனால், ஆண்டு ஒன்றுக்கு "பத்து லட்சம்" கொட்டி அழும் கவர்னர் பதவி, அநாவசியமாக இன்னும் இருக்கிறது! ஜான இறந்துபோனதால், அஸ்ஸாமில் முதல் மந்திரியாயிருந்த விஷ்ணு ராம மெகதி, இங்கு கவர்னராகியிருக்கிறார் !! முதலமைச்சர் பதவியை இவர் விடுவதற்குக் காரணம், உடல் நலக் குறைவாகயிருப்பதுதான் என்று கூறினார்கள். இப்போது, நேரு, "அதெல்லாமில்லை. அவர், திடகாத்திரமாகவேயிருககிறார்,' என்று அறிக்கை விட்டுள்ளார். மெகதி நல்லவரா புத்திசாலியா என்பதல்ல நமக்குக் கவலை. பத்து லட்ச ரூபாய் விரயமாகும் ஒரு வீண் பதவி, எதற்காக. இதனால், யாருக்கு என்ன பிரயோசனம்.

*

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நடைபெறுகிறது !— என்று சொன்னால், உங்களில் பலர், 'எங்கே?', என்று கேட்பீர்கள். அவ்வளவு அழகில் நடைபெறும் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில் அதாவது சென்ற ஆண்டில் 750 கோடி ரூபாய் செலவிட்டார்களாம். நடக்கும் இந்த ஆண்டில் 850 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டு 50 கோடி ரூபாய் மிஞ்சிவிட்டதாம். மூன்றாவது ஆண்டான அடுத்த நிதி ஆண்டில் 950 - கோடி செலவிடப் போகிறார்களாம். இதில் மத்திய சர்க்காரின் திட்டச் செலவுகளுக்காக 500 கோடி ரூபாயும், மாநில சர்க்கார்களின் செலவுகளுக்காக 450 கோடி ரூபாயும் செலவிடப்படுமாம்.

*

சோஷியலிஸ்டுத் தலைவர் லோகியா, நாகபுரியில் ஒரு கல்லூரிக்குப் பேசப் போயிருந்திருக்கிறார் சென்ற வாரம்! அங்கு இருக்கும் பெரும்பாலோர் லோகியா, ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்றனராம். முடியாது — நான் இந்தியில் தான் பேசுவேன் என்று லோகியா பிடிவாதம் செய்ய, மாணவர்கள் கூட்டத்தை விட்டே வெளியேறினராம்! நாகபுரி தமிழ்நாட்டிலிருப்பதுஅல்ல! இதேபோல, கௌகத்தி காங்கிரஸ் மாநாட்டிலும் நடந்ததாம். பலர் இந்தியிலேயே பேசினராம். அதைக் கண்ட மக்கள், எழுந்து போய்க்கொண்டேயிருந்தனராம். ஏற்கனவே, கூட்டம வேறு குறைவு. இருப்பதும் போய்விட்டால்......? எனவே, நேரு. அசாம் மொழி தெரிந்த இருவரைக் கூப்பிட்டுப் பேசச் சொல்லி, சமாளிக்க முயன்றாராம் !!

---

கருப்புக் கொடிகாரருக்கு வெற்றி — வெற்றி — வெற்றிமேல் வெற்றி—வீர வெற்றி! என்றுதான் சொல்லவேண்டும்.

ஏன், எப்படி?

ஒரு நாட்டுப் பிரதம மந்திரி 'வணங்காமுடி மன்னன்' சர்வாதிகார சிகாமணி எப்படிப்பட்டவர்களையும்

'நான்சென்ஸ்'

'காட்டுமிராண்டி'

'கண்டெம்டு மேன்'

'கிழட்டுப்பிண்டங்கள்'

'இருந்தால் அடங்கிக் கிட; இல்லாவிட்டால் வீட்டைவிட்டு ஓடு'

"யாரானலும். எப்படிப்பட்ட பெரியவரானலும், மன்னிக்க முடியாது; போடு ஜெயிலில்/ அனுப்பு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு!"

என்றெல்லாம் பேசும் 'வீரப் பிரதாப தீர புருஷர்' ஆயிரக்கணக்கான போலீசு பாதுகாப்புடன் தொடங்கிய பவனி கலேந்து ஓட்டம் பிடிக்கவேண்டியதானது மாத்திரமல்லாமல், இத்த நிலைமையையெல்லாம் தெரிந்தும் அதிகாரிகள் பல ஆயிரக் கணக்கான பல நாட்டுப் போலீசுப்படைகளைக்கொண்டு வந்து நிறுத்தியும் கைசலிக்க லத்தி சார்ஜ் தடியடி அடித்து மக்களின் கைகால்களை முறித்துத் தள்ளியும், பலரைச் சாகடித்தும், கண்ணீர்ப் புகை வெடிகளை சரமாரியாக வெடிக்கச் செய்யப்பட்டது, உலகம் புகழும் வீர ஜவகர்லால்பண்டிதர் தனிப்பட்ட முறையில் அல்லாமல் 35-கோடி மக்களுக்கு இணையற்ற சர்வாதிகாரியான 'பிரதாப சிம்ம' முதல் மந்திரியாக எழுந்தருளி திக் விஜயம் செய்யும்போது நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஏற்பாடு செய்திருந்த இடத்திற்குப் போய்ச் சேர, நிகழ்ச்சிக் குறிப்புப்படி ஏற்பாடு செய்திருந்த ராஜபாதை வழியில் செல்லாமல் செல்ல முடியாமல் கொல்லை வழியில் போய்ச் சேரவேண்டி வந்ததென்றால், இது அதிகாரிகளுக்கு வெற்றியா? கொடி பிடித்தவர்களுக்கு வெற்றியா?

"விடுதலை'

11—1—58

# 'பொங்கலு'க்குப்பிறகு!

லர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [2-2-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 29

சிறையில் பூட்டு! தேடிப் பிடித்து, வா! கண்ணீர்க் குண்டுகளைப்போடு! உள்ளூர் போலீஸ் போதாதென்ருல் ஆந்திரப் போலீசைக் கூப்பிட்டுக்கொள்! எம். எல். ஏ. க்களானலும் எம். பி. க்களானலும் கொட்டடியில் பூட்டு! சந்தேகப்பட்டவரையெல்லாம் இழுத்துவந்து அடை! அதிகாரம் இருக்கும்போது நம்மை யார் என்ன செய்துவிட முடியும்? நேருவின் கண்ணெதிரே ஒரு கருப்புக் கொடி கூடத் தெரியக்கூடாது!!— என்கிற தீர்மானத்தில், சென்னை அரசு அவிழ்த்து விட்ட அடக்குமுறைகளையும், தடியடி தர்பார்களையும் கண்ட பிறகும்கூட, திராவிடப் பெருங்குடி மக்கள் உள்ளம் தளராது பொங்கி வரும் வீர எழுச்சியை உணர்த்தும் வகையில் "நேருவுக்குக் கண்டனம்" காட்டிய பிறகு, நாட்டில் எழுந்துள்ள நிலைமைகளை, தோழர்கள் அறிவர். இரண்டு உருவங்கள், மிதிபட்டுச் செத்தன! ஆயிரக்கணக்கானவர்கள் அடிதடிக்காளாகி, தழும்புகளோடு உலவுகின்றனர்!! அரசினர் மூட்டிய ஆத்திரத் தீயின் காரணமாக, கழகத்தவர் மட்டுமல்ல, பொதுமக்களும் தாக்கப்பட்டனர். மவுண்ட்ரோடு வட்டாரமே கண்ணீர் சிந்துமளவில், வீட்டுக்குள் புகுந்தும், எதிர்ப்பட்டோரையெல்லாம் தாக்கியும், கொடுங்கோன்மைகள் நிகழ்த்தப்பட்டன. இந்தப் பொல்லாச் செயலால், ஆத்திரத்துக்கு ஆளாகிய மக்கள் 'அடாவடி'ச் செயல்களில் ஈடுபடும் அலங்கோலமும் நிகழ்ந்திருக்கிறது!!

சென்னையின் 'கௌரவம்' போய்விட்டதே என்று சிந்து பாடுகிருர் ஒரு அமைச்சர்—நேருவின் 'தயவு' போய்விடும் போலிருக்கிறதே, என்று கலங்கிஞராம் இன்னொரு அமைச்சர்—பத்திரிகை நிருபர்களைக் கூட்டிவைத்து தனது வீரப்பிரதாபத்தினை வெளிப்படுத்திக் கொண்டாராம், முதலமைச்சர்! சேதிகள் பல வருகின்றன—சென்னைப் போலீஸ் அதிகாரிகூட 'அறிக்கை' விடுகிருர் பத்திரிகைகளில் — செல்லுமிடந்தோறும், அமைச்சர்கள், ஏதேதோ பேசுவதாக ஏடுகள் சொல்லுகின்றன.

நேருவுக்குக் கருப்புக் கொடி! — ஏன் காட்ட முடிவு செய்தோம் என்பதை, நாடு அறியும். தென்னட்டுத் தலைவர்கள் என்ருலே, எடுபிடிகள் போலவும், ஏனோதானோ என்றும் எப்போதும் பேசிவரும் நேருவின்போக்கைக்கண்டிப்பதே,நாம் கருப்புக்கொடி காட்ட முடிவு செய்ததின் முதல் நோக்கமாகும். அதை விளக்கப் போடப்பட்ட பொதுக் கூட்டத்துக்கு அனுமதி வழங்க மறுத்தனர். அடாது' என்பதால் மீற முடிவு செய்தோம். கைது செய்து, வழக்கும் போட்டிருக்கின்றனர்!! கூட்டத் தடையை மீற முயற்சித்தவர்கள் மீது மட்டுமல்ல, சாதாரணமாகச் சென்ருேர், ஆரும் தேதியன்று தடியடிக்கு ஆளாகி ஆசுபத்திரிக்குக் கொண்டு போகப்பட்டோர் மீதுகூட வழக்குகள் போடப்பட்டுள்ளன!!

அமைச்சர் குழு, நேருவின் அன்பைக் காப்பாற்றிக்கொள்வதற்காகவும், பெரியாரின் எடுபிடியே சென்னை சர்க்கார் என்று டில்லியில் உலவும் கருத்தை, 'இல்லை' என்று காட்டிக்கொள்ளவுமே, இவ்வளவு 'கடுமையாக' நடந்துகொண்டதாக ஒரு புறம் கூறப்படுகிறது. காமராசரின் ஆட்சி பற்றி, டில்லியில் தவறுதலான கருத்துக்கள் உள்ளனவாம்! அத் தவறினைப் போக்கிக்கொள்ளவே, தடியையும் தடைகளையும் நாடினராம், காமராஜ். இரண்டு உயிர்கள்! ஏராளமான அண்ணன் தம்பிகளின் உடல்களிலே, காயங்கள்!! — இவ்வளவு தூரம் நடத்தி, நேருவின் அன்பினைப் பெற, அரும் பாடுபட்டிருக்கிருர்கள். கிடைத்தது அன்பா! கேலியா!! என்பது ஒருபுறமிருக்க, இவ்வளவு அலங்கோலத்துக்கும் காரணமான அமைச்சர்கள், ஆங்காங்கு செல்லுமிடந்தோறும் பேசும் பேச்சுகள் சிந்தையைக் கிளறுவதாயிருக்கின்றன.

பதவியின் ருசி, பலரைக் கொடுங்கோலர்களாக்கியிருக்கிறது! மணிமுடிகளைப் பெறுவதற்காக, தந்தையைக் கொன்ற தனயர்கள்—பிள்ளைகளைக் கொன்ற பெற்றவர்கள்—உற்றவர்களை உதைத்துத் துரத்தியவர்கள்—அக்கிரமங்களைச் செய்ய அணுவளவும் அஞ்சாதவர்கள், எத்தனையோ விதத்தில் இருந்திருக்கின்றனர், என்பதை சரிதங்கள் சொல்லும். நமது மாநிலத்தில்கூட, பதவியின் காரணமாக, காங்கிரஸ் கட்சி, யாராரை ஓட ஓடத் துரத்தியிருக்கிறது —

என்னென்ன சாகசங்களைச் செய்திருக்கிறது—ஆடிய சதிர்கள் எத்தனை யெத்தனை என்பதை நன்றாக அறிவோம்; நாம். நேருவுக்கு நல்ல பிள்ளைகளாக நடந்துகொள்ளவேண்டும், அப்போதுதான் மேலிடத்துத் தயவு நீடிக்கும் என்கிற ஒரே காரணம் தான், இங்குள்ளவர்களின் பாசத்தை மறைத்து நேசத்தைக் கொன்று, இவ்வளவு அடக்குமுறைகளை அள்ளிவீசச் செய்திருக்கிறது என்பதை அனைவரும் அறிவர். இல்லாவிட்டால், கருப்புக்கொடி காட்டிட அனுமதித்திருக்கும், சென்னை அரசு—கடற்கரையில் கூட்டம் நடத்தவும் செய்திருக்கும்.

நேருவுக்காகவே, இவ்வளவு தூரம் அடக்குமுறைகளை மேற்கொண்டோம்!—என்பதை, அன்பர் பக்தவத்சலம், ஒளிவு மறைவின்றி உரைத்திருக்கிறார். அவர் வரும்போது, கருப்பக் கொடி காட்டலாமா?—என்று கேட்டிருக்கிறார். நேரு, உலகத் தலைவர்!—அவருக்குக் கருப்புக் கொடி காட்டுவதை எங்களால் சகிக்கமுடியுமா? என்று, கேள்வி கிளப்பியிருக்கிறார். நேரு, இந் நாட்டின் பிரதம மந்திரி! அவரைக் கண்டிக்கப் பொதுக்கூட்டம் போடுவதா—ஐயகோ, அதை நாங்கள் எப்படி அனுமதிப்போம்—என்றும் அலறியிருக்கிறார். பக்தவத்சலனாருக்கு நேரு, 'கண்கண்ட தெய்வமாக' இருக்கலாம்! அண்மையில் கூடத் தேர்தலில் தோற்ற அளகேசனாருக்கு நேருவின் 'கிருபை' கிடைத்திருப்பதை நாடு அறியும்!! அதற்காக, எல்லோரும் பக்தவத்சலனாருடன் கூடிக்கொண்டு நேருவின் பாதாரவிந்தங்களைச் சேவிக்கவா முடியும்? "மாடுமனை போனால் என்ன, மக்கள் சுற்றம் போனால் என்ன, மந்திரிப் பதவி போதுமடி!", என்கிற பல்லவி, பொருத்தமாகயிருக்கக் கூடும் அவருக்கு. அந்தப் பதவியை வழங்கும் நிலையிலுள்ள நேருவின் தயவும் கிருபையும் பெரிதாக இருக்கலாம்! மானம் போனாலும், தமிழ்நாடு எனும் பெயர் போனாலும், தேவிகுளம் பீர்மேடு போனாலும், தெற்குத் தேய்வதானாலும், சிறந்த பெரும் தலைவர்களின் கீர்த்தியை இகழ்ந்துரைத்தாலும், 'பதவிக்காக' விட்டுக்கொடுக்கும் 'பெருந்தன்மை' இருக்கக்கூடும் அவருக்கு!! அந்த அவசியம் பிறருக்கு ஏன்? தேய்ந்தும் காய்ந்தும், வயிறு ஒட்டியும் வேலை கிடைக்காமலும், வாடியும் வதங்கியும், வளர்த்த மொழிக்குக் கேடு விளைக்கப் படுவதைக் கண்டு கொதித்துக் கிடக்கும் மக்களுக்கு, "ஜே" போடவேண்டிய அவசியம் என்ன? காமராஜர் சென்னையை ஆள்கிறார்—அங்கு போனால் வசந்தம் வீசுகிறது என்று நேரு கருதி ஆனந்தமடைந்தால், 'இலாபம்' அவர்களுக்குண்டு. அதனால், மக்களுக்கென்ன!! மராட்டியம் சென்றால் கருப்புக் கொடி காட்டுகிறார்கள் — சீக்கிய நாடு சென்றால் சினம் காட்டுகிறார்கள் — நாகர் குன்றுகளுக்குப் போனால் எதிர்ப்புக் காட்டப்படுகிறது — வங்கத்திலும் ஆத்திரம் தென்படுகிறது — இவையாவும், நமது ஐந்தாண்டுத் திட்டத்தால் பலன் பெறும் பாகங்கள்! பலனும் காணாத, நமது ஆதிக்கத்துக்கு வேட்டைக்காடாகவும் விளங்கும், சென்னையிலோ—இந்தியைப் புகுத்தினாலும், தமிழ்நாடு எனும் பெயர் வழங்க மறுத்தாலும், தமிழருக்குரிய இடங்களைக் குறைத்தாலும், தமிழர்தம் தலைவர்களை ஏசினாலும், —மாலையும் மரியாதையும் கிடைக்கிறது, இதற்குக் காரணம் காமராஜரும் பக்தவத்சலமும்தான் என்று நேரு கருதினால், பரிசும் புன்சிரிப்பும் நிறையக் கிடைக்கக்கூடும்! 'கௌரவமும்' நீடிக்க வாய்ப்புண்டு ஆள்வோருக்கு!! அதனால், நாட்டுக்கு என்ன பலன்? நாட்டில் வாழும் மக்களின் மானமும் நல்வாழ்வும் காப்பாற்றப்படும் என்பது என்ன நிச்சயம்?

கருப்புக்கொடி காட்ட வேண்டாம் — நாங்களும் தமிழர்கள்தானே — தமிழர் தம் தலைவர்களை இகழ்ந்துரைப்பது கூடாதென நேருவிடம் எடுத்துரைக்கிறோம் — கார்டு கவர்களிலுள்ள இந்தியை நீக்குங்கள் என்று உடனே டில்லிக்குச் சொல்கிறோம் —தமிழ் நாடு என்கிற பெயர்தானே வேண்டும், சரி, ஏற்பாடு செய்கிறோம்—நீங்கள் கருப்புக்கொடி காட்ட வேண்டாம்!! என்று கேட்டிருந்தால், அதிலே பொருளும் உண்டு, நியாயமும் உண்டு.

இதையெல்லாம், இவர்கள் கேட்க மாட்டார்கள்! பசித்தாலும் துடித்தாலும் மக்கள் மட்டும் அவதியடைய வேண்டும், ஆனால் பாராளும் பிரதமருக்கு மாலைகளையும் 'ஜே'களையும் போட்டு வாழ்ததுப் பாடி அனுப்ப மட்டும் யாவரும் ஒன்றுபட வேண்டும் என்றால் என்ன பொருள்? அதனால், இலாபம் நாட்டுக்கு உண்டென்றால், சரி! அப்படியில்லையே!!

பிரதமருக்குக் கருப்புக் கொடியா! அவரை எதிர்த்துக் கூட்டம் போட அனுமதிப்பதா!! — என்கிற பக்தவத்சலனாரின் கூற்று, ஜனநாயகம் பற்றிப் பேசப்படும் இந்தக் காலத்தில், எவ்வளவு மட்டரகமானது என்பதை யாவரும் அறிவர். கருப்புக் கொடி பிடிப்பதும், கூட்டம் போட்டுக் கண்டனங்களை எடுத்துக் காட்டுவதும்தான், ஜனநாயகத்திலுள்ள சிறப்பு மிக்க அம்சங்களாகும். ஜனநாயகமா? சே! அதெல்லாம், பேச்சுக்கு. காரியத்தில், எங்களோடு, ஒத்தூதுவதுதான் எல்லோரும் செய்ய வேண்டியது!! — என்கிறார் அமைச்சர். இலாபம் அடைந்துகொண்டிருப்பவர்! என்ன பதிலைச் சொல்ல முடியும் அவருக்கு!!

உணர்ச்சிப் பொங்கலுக்குப்பிறகு, காமராஜரும் தமது வாய் திறந்து, நம்மைப்பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறார். இன்னொரு சகாவான சுப்பிரமணியமும்

(13-ம் பக்கம் பார்க்க)

# திணிப்பதில்லை என்று கூறிக்கொண்டே திணிக்கப்படுகிறது

அகில - இந்திய ஆட்சிமொழி விஷயமாக மேற்கொண்டு என்ன செய்ய உத்தேசம் என்பதைப் பற்றி அதிகார பூர்வமாக அறிவிக்க வேண்டியது இந்திய சர்க்காரின் பொறுப்பு. 1965-ம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கலாம். எல்லோருடைய இணக்கத்தின் பேரில்தான் ஹிந்தி - ஆட்சிமொழித் திட்டம் அமலுக்கு வர வேண்டும் என்று பொருள்பட கௌஹாட்டியில் நிறைவேறியுள்ள தீர்மானத்தில் புதுநிலைமை எதுவும் ஏற்படவில்லை. அரசியல் சட்டம் கூறியிருப்பதும், காங்கிரஸ் காரியக் கமிட்டி முன்னர் முடிவு செய்திருப்பதுந்தான் அதில் சேர்ந்து காணப்படுகின்றன. இந்தத் தீர்மானம் நிறைவேறியது ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களுக்குப் பெரியதோர் வெற்றி என்று நினைப்பது அசட்டுத்தனம். தீர்மானத்தில் கூறியிருப்பதைவிட சொல்லாமல் விட்டிருப்பதுதான் அதிக முக்கியத்துவமுள்ளது. ஆங்கிலத்தின் உபயோகத்தில் மாறுதலும், இந்தியைப் புகுத்துவதும் எப்படி, எவ்வாறு, யாரைக் கொண்டு முடிவாகி, எந்த வகையில் அமல் நடத்தப்படும் என்பதுதான் முக்கியம். சென்னையில் குடியரசு தினக் கூட்டத்தில் பேசிய நமது ராஜ்ய மந்திரிகள் இதைப் பற்றி எதுவும் பேசவில்லை. காங்கிரஸ் விஷயாலோசனைக் கமிட்டியில் இத்தகைய பிரச்னைகளை ஸ்ரீ. சுப்ரமண்யம் எழுப்பினார். பிறகு தமக்குத் திருப்தி ஏற்பட்டுவிட்டதுபோல காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பேசினார். ஆனால் விவாத விவரங்களிலிருந்து, திருப்திகரமான விளக்கம் எதுவும் அவருக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை. தனிப்பட நேருஜி என்ன கூறினாரோ, அது யாருக்கும் தெரியாது. ஆனால் பொதுமக்கள் சம்பந்தப்பட்ட வரை, மேல் நடவடிக்கைகள் எப்படி உருப்பெறும் என்பதைப்பற்றி சம்பந்தப்பட்ட எல்லோருமே மௌனம் சாதிக்கிறார்கள். இது நல்ல நிலையல்ல.

இந்தி எதிர்ப்புக்குரிய காரணங்களை விளக்கி, அது, ஒருபோதும் நாட்டின் பொதுமொழியாக ஆகமுடியாதென்று, இன்றல்ல நேற்றல்ல, இருபதாண்டுகளுக்கு மேலாகவே நாம் கூறிவருகிறோம். இப்பொழுதும் கூறுகிறோம். ஆனால், நாம் கூறுவதைக் காதால் கேட்டு கருத்தில் இருத்த மறுத்தோரெல்லாம் இன்று இந்தி எதிர்ப்பில் நம்மையும் மிஞ்சி நிற்கின்றனர் என்பதைக் காணும்போது, நம்முடைய பணி பழுதானதல்ல — பயனுள்ளது தான் என்று எதிர் முகாமில் இருப்போர் கூறுவதைக் கேட்கும்போது, களிபேருவகை அடைகின்றோம். நாம் குறிப்பிடக் கூசிய சொற்களையெல்லாம் அவர்கள் பயன்படுத்தி இந்தி எதிர்ப்பு முழக்கம் செய்கிறார்கள் —

**அசட்டுத்தனம், மந்திரிகளின் பசப்பல், பிரதம மந்திரியின் மழுப்பல், சுதந்திரத்துக்கே ஆபத்து, இது ஒரு தலைவரின் விவகாரமல்ல,**

என்ற இன்ன பிற சொற்களையும் சொற்றொடர்களையும் உள்ளடக்கிய ஒரு தலையங்கத்தை **29—1—58**ல் "தினமணி" தீட்டியிருக்கிறது. அத்தலையங்கத்தை அப்படியே இங்கு வெளியிட்டிருக்கிறோம்.

ஹிந்தி திணிக்கப்படமாட்டாது என்று சொல்லிக்கொண்டே தபால் இலாகா உள்பட பல துறைகளில் அதன் உபயோகம், பிற மொழிப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டிருப்பது நல்லெண்ணத்தைக் காட்டவில்லை; எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையைத் தருவதாக இல்லை. எனவே இதுவரை மத்திய சர்க்காரது உத்தரவின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட அத்தகைய நடவடிக்கைகளையெல்லாம் உடனடியாக நிறுத்திவிடுவதுதான் இன்றைய நிலைமையின் தேவைக்கு ஏற்ற சமிக்ஞையாக இருக்கும். அடுத்தபடியாக, பிற மொழியினரின் இணக்கத்தையும் ஒத்துழைப்பையும் பெறுவது பற்றிச் சிந்தித்து, தக்க வழிவகை வகுத்து, எல்லா ராஜ்யத்தினரையும் ஆலோசனை கலந்து ஒரு திட்டத்தை உருவாக்கி, படிப்படியாக ஏற்றம் காண முயற்சிக்க வேண்டும். இந்த நடவடிக்கையில் நிர்ப்பந்த அம்சமே சிறிதும் இருக்கலாகாது. இந்தத் திட்டத்தின் இணைபிரியாத உட்பகுதி பள்ளிக்கூடங்களில் ஹிந்தியின் போதனை. அதைத் தனியாக கவனிப்பதற்கில்லை. இத்துடன் சேர்த்தே கவனிக்கவேண்டும்' பரிசீலித்தாக வேண்டிய மூன்றாவது அம்சம் ஹிந்தியை வளப்படுத்துவது: அது முதலில் நான்கு ஹிந்தி ராஜ்யங்களில் ஆட்சிமொழியாகச் செயலாற்றட்டும். அவற்றில் முதற்படியாக ஒருமுகமான ஹிந்தி உருவான நிலையில்தான் அதன் அகில-இந்தியத் தகுதி வெளிப்படும். இதற்கிடையே இந்தியாவெங்கும், எல்லா ராஜ்யங்களிலும் அத்தகைய ஹிந்தியைக் கையாளககூடியவர்களின் தொகை கணிசமாக ஏற்படக்கூடிய போதனை நடக்கும. அந்நிலைமை வரும்வரை ஹிந்தி அகில-இந்திய ஆட்சிமொழியாவது தள்ளிப் போடப்படுவதுதான் நியாயம். அப்படி வளம்பெறும இந்திகூடச் சிறுகச் சிறுகத்தான் ஆங்கிலத்துக்குப் பதிலாகப் பயன்பட முடியும்.

## உடனடியாக நிறுத்திவிடுங்கள்

# இதுபோன்ற அபாயம் வேறு கிடையாது

மொழி வளம், தேசமெங்கும் பரவலாக மக்கள் அறியும் வகையில் அகில - இந்தியத் தகுதி, ஆகிய இரண்டும் இந்திக்கு ஏற்படுவது எப்பொழுது சாத்தியம் என்று எவராலும் சொல்ல முடியாது. மொழி வளர்ச்சி இயற்கையானது. தானகக் கனிய வேண்டும். தடிகொண்டு பழுக்க வைக்க முயன்றுல் பயன் பூஜ்யந்தான். அகில - இந்தியத் தகுதியின் வளர்ச்சி இரண்டாவது கட்டத்தைச் சேர்ந்தது. படிப்புத் திட்டம், ராஜீய சூழ்நிலை, பொருளாதார மாறுதல்களின் வேகம், தேசத்தில் இனி ஏற்படக்கூடிய பல மொழித் தொழில் பகுதிகளின் செல்வாக்கு முதலியவற்றையே அதன் அபிவிருத்தி பொறுத்திருக்கும். எந்த மொழியினருக்கும் பாதகம் இல்லாதபடி இவ்விரு தகுதிகளும் ஏற்படுவது இரண்டு அல்லது மூன்று தலைமுறைகளில் நடக்கவேண்டிய விஷயம். **காங்கிரஸ் தீர்மானமோ, மந்திரிகளின் பசப்பலோ, பிரதம மந்திரியின் மழுப்பலோ இந்த உண்மைகளை மறைத்து விட முடியாது.** இந்தியின் இயற்கையான வளர்ச்சிக்கும் வியாபகத்துக்கும் உழைக்க வேண்டியது அவசியம் என்றுலும், **அதை அவசரப்பட்டு அகில - இந்திய ஆட்சிப் பீடத்தில் ஏற்றிவிடப் பார்ப்பதைப் போன்ற அபாயம் வேறு இருக்க முடியாது.**

ஆங்கிலத்தின் உபயோகத்தை வேகமாகக் கைவிட்டால்தான் ஹிந்தி பரவுவதற்கான சூழ்நிலை ஏற்படும் என்று ஹிந்தி மொழியினரில் சிலர் நினைக்கிருர்கள். நல்லாட்சி தேச ஒற்றுமை, ஐக்கிய உணாச்சி, பாதுகாப்பு, சுதந்திரம், நல் வாழ்வை நோக்கி வேகமான முன்னேற்றம் ஆகியவை தாம் பிரதானம். இன்று ஆங்கிலத்தின் மூலந்தான் இந்தப் பொறுப்புக்கள் அகில இந்திய நடவடிக்கைகள நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இதைத் திடீரென மாறற முடியாது. மேலே நாம் குறிப்பிட்டபடி, அகில-இந்திய இணக்கத்தின் பேரில், காலக்கிரமத்தில், ஹிந்தி சிறுகச் சிறுக வரச்செய்வதுதான் நியாயம். ஹிந்தியுடன் ஆங்கிலத்தையும் சிறிது காலத்துக்குச் சகித்துக்கொண்டு இருக்கலாம் என்ற அடிப்படையில் ஆட்சி மொழிப் பிரச்னை கவனிக்கப்பட்டால், தேசத்திற்குப் பெரிய தீங்குதான் நேரும். தேச ஒற்றுமைக்காக ஹிந்தி வேண்டுமென்பவர்கள், அதே ஒற்றுமைக்காக ஹிந்தி தகுதியடைந்து பிற மொழியினருக்கு முழுத் திருப்தி ஏற்படும் வரை இப்பொழுது போலவே ஆங்கிலம் நீடிப்பதற்கு இணங்குவதுதான் அறிவுடைமை.

ஆங்கிலம் போய்க்கொண்டே இருப்பதாகவும் அதை யாராலும் காப்பாற்ற முடியாதென்றும் சென்னைக் கூட்டத்தில் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் கூறினராம். ராஜ்யத்தில் ஆட்சி மொழியும், காலேஜில் போதன மொழியும் தாய் மொழியாக இருக்க வேண்டும் என்று முடிவான நிலையில் ஆங்கிலத்துக்கு இடமேது என்று அவர் கேட்டாராம். அவரே சற்றுச்சிந்தித்திருந்தால் இப்படிக் கேட்டிருக்க மாட்டார். தாய் மொழி ராஜ்ய ஆட்சி மொழியாவது முழுமை காண்பதற்கு பல ஆண்டுகளாகும். காலேஜ் படிப்புப் பற்றி இன்னும் எவரும் முடிவு செய்யவில்லை. தாய் பாஷை போதன மொழியாவது அவசியமே. ஆனல் அதில் ஏற்றம் காண்பது மிக மெதுவாகத்தான் இருக்க முடியும். இதில் எழும் எண்ணற்ற பிரச்னைகள் நெக்கு விடுவது சுலபமல்ல. இவ்விரண்டும் இயற்கையான வளர்ச்சிகளே. ஓரளவுக்கு ஆட்சியாளர் துணை புரியலாம். ஆனல் மக்களுக்குப் புரியக்கூடிய ஆட்சி மொழியும், கருத்துச் செழுமையுளள போதன மொழியும் பருவத்தின லனறிப் பழா என்பதை மறுப்பதற்கில்லை.

இடைக்காலத்தில் மட்டுமின்றி, எக்காலத்திலுமே அறிவு வளர்ச்சிக்காக ஆங்கிலத்தில் நல்ல பரிச்சயம் இன்றியமையாதது. இதை உணர்ந்துதான், நமது ராஜ்யத்தில் ஆங்கில போதனையை இனி 5-ம் வகுப்பில் தொடங்கப் போகிருர்கள். ஹைஸ்கூலில் ஆங்கிலப் படிப்பின் தரத்தை உயர்த்தத் தேசமெங்கும் திட்டமிடப்பட்டுள்ளது. பாடப் புத்தகங்களைச் சிரமப்பட்டுத் தாய் மொழியில் ஏதோ ஒரு மாதிரி தயாரித்து விட்டாலும், அறிவு வளர்ச்சிக்கான உபநூல்களை நிரந்தரமாக ஆங்கிலத்தில்தான் படிக்க வேண்டியிருக்கும். ஆகையால்தான் ஆங்கிலத்தைப் புரிந்துகொண்டு, கையாளும் தகுதி இந்தியாவெங்கும் அதிகமாக வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டுள்ளது. படிக்க வருகிறவர்கள் அதிகரித்து வருவதால், இனி, ஆங்கிலம் தெரிந்தவர்களின் எண்ணிக்கையும் வீதா

## அன்பு

அன்பில் எத்தனையோ விதம் உண்டு. தாய் சின்னஞ்சிறு குழந்தையை மடியில் வைத்து அணைத்துக் கொள்ளுகிருள்; குழந்தை வளரும்போது அதைக் கட்டிக் கொஞ்சி முத்தமிடுகிருள்; குழந்தை பெரியவனகித் தனக்குமேல் உயரமாய் வளர்ந்துவிடும்போது கண் குளிரப் பார்க்கிருள். அன்புதான் இத்தனை விதமாகவும் வெளிப்படுகிறது. அன்பு எவ்வளவோ சிக்கல்களைத் தீர்க்கிறது; சிக்கல்களை ஏற்படாவண்ணமும் தடுக்கிறது. பெற்றோர்களின் பரிபூரண அன்புக்குரிய குழந்தை சந்தோஷமாய் வளர்வதுடன், வேறு சங்கடத்துக்கு ஆளாகாமலும் இருக்கும்.

—பேரெண்ட்ஸ் மாகஸின், (சிக்காகோ)

**இந்தி எப்போது வளம்பெறும் என்று எவராலும் கூறமுடியாது!**

# சுதந்திரத்துக்கே ஆபத்து

சாரமும் போகப் போக உயர்ந்து கொண்டே இருக்கும். ஆங்கிலம் 100-க்கு 99·5 சதம் பேருக்குக் கட்டாயப் படிப்பு மொழியாக இருக்குமாகையால், சில ஆண்டு களுக்குப் பின் அது தனிப் பெரும் மொழியாக விளங்கக்கூடும். சிந் தித்துப் பார்த்தால் இவை திரு. காமராஜுக்கு தாமே புலப்படும் என்று நினைக்கிறோம்.

ஆங்கிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற மோகம் எவ ருக்குமில்லை. அப்படியிருப்பதாக அவர் நினைப்பது தவறு. அகில - இந்திய அடிப்படையில் இன்று ஆங்கிலம் நல்ல முறையில் செயல் படுவதுபோல் இனியும் நெடு நாளைக்கு இருக்கச் செய்வது இன்றியமையாதது. உணர்ச்சி வசப் பட்டு அதைக் கைவிட்டு, அரை குறை இந்தியைத் திணித்து, தேசத்தின் ஒற்று மையைச் சிதைத்து, நிர்வாகத்தை நிலை குலைத்து, சுதந்திரத்துக்கு அபாயத்தை விளைவித்துவிடக் கூடாதே என்பதுதான் விஷயமறிந்தவர்களின் கவலை. இதை திரு. காமராஜ் புரிந்துகொள்வது அவசி யம். நேருஜிக்குத் தெரியாதா என்று கேட்பதால் பயனில்லை. நேருஜி இவ் விஷயமாக என்ன செய்யப் போகிறார் என்பதுதான் முக்கியம். தவிர இது ஒரு தலைவருடைய விவகார மல்ல. எனவே, தாம் வாக் களித்து வரும் அகில — இந்திய இணக்கத்தையும் ஒத் துழைப்பையும் உருவாக்க அவர் என்ன செய்யப் போகிறார் என்பது தான் முக்கியமாகிறது.

★


சேலம் மாவட்ட

## தி. மு. க. 3-வது மாநாடு

1958 பிப்ரவரி 15, 16 சனி ஞாயிறு நாட்களில்

வேலூர் (சேலம்) 'அழகிரி பந்தலி'ல் நடைபெறும்.

தலைவர்: கலைஞர் மு. கருணாநிதி, எம். எல். ஏ.

திறப்பாளர்: நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி

அண்ணாதுரை, நாவலர் இரா. நெடுஞ்செழியன்

கழக முன்னணிச் சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்வர்.

இருநாட்களிலும் கலை நிகழ்ச்சிகள் உண்டு.

இரு நாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—

ஆண்களுக்கு ரூ. 5, 3, 2, பெண்களுக்கு ரூ. 1.

பி. எம். குப்புசாமி — பொருளாளர்
ப. இராமலிங்கம் — செயலாளர்
ஜி. பி. சோமசுந்தரம் — வ. கு. தலைவர்

இரா. தாண்டவன் — தொண்டர் படைத் தலைவர்.

# குறுந்தொகை அளிக்கும் நகைச்சுவை விருந்து

—[கோ. கோதண்டராமன்]—

அகத்துறை நூல்களில் ஒன்ருகிய 'குறுந்தொகை' என்னும் தொகை நூல் கருத்தாழமும் சொல் வளமும் விரவி, கற்போரின் நெஞ்சையள்ளும் பெற்றியுடைத்தாதலை நாம்காண்கிருேம். குறுந்தொகைப் பாடல்களில் மாங்கொழிக்கும் அருஞ்சுவையில் மாங்கித் திளைத்த காரணத்தாலேயே பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் அதனை, 'நல்ல குறுந்தொகை' என்று போற்றிப் புகழலாயினர் போலும்! குறுந்தொகைப் பாடல்களில் துள்ளும் தமிழ்க்கவினும், அப்பாடல்களில் பரந்து செறிந்து காணப்படும் காதல், கனிவு, நகை, அவலம் போன்ற பல்வகைச் சுவைகளும் நம்மையெல்லாம் வெறிகொள்ளச் செய்யும் தகைமைத் தாகலின், குறுந்தொகை, புலமை மணம் கமழும் சிறந்த ஓர் கவிதை நாடகமெனில் மிகையாகாது. குறுந்தொகைப் பாடல்களை நாம் கற்க முனைகின்றபோது, அப்பாடல்களில் வரும் பாத்திரங்களுடன் இயைந்து விடுகிருேம். நம்மை அறியாமல் நம்முள்ளம் பெருமிதத்தால் சிறகடித்து எங்கோ பறந்து செல்கிறது. என்னே அக்கவிதைகளின் அருந்திறம் இருந்தவாறு!

நெய்தல் நிலத்துத் தலைமகன் ஒருவனுக்குப் பரதவர் குலத்துப் பூங்கொடியாள் ஒருத்திமீது மட்டிலாக் காதல். அந்த மீனவர் குலத்துத் தேன்மொழித் தோகைக்கும் அத் தலைமகன்பால் அளவிறந்த காதல். இவர்களின் காதல் நாடகத்துக்கு உறுதுணையாக நின்ருள் ஒரு தோழி! தலைவியின் வேண்டுகோளுக்கிணங்க, ஓர் நாள் தலைமகனிடம் தோழி சென்று, அவனை மறுநாள் பகற்பொழுதிலே, அருகிருந்த கடற்கரை மருங்கர் அமைந்த இருண்ட புன்னைமரச்சோலை ஒன்றின் பக்கத்தில் இருந்த வெண்மணற் பரப்பில் வந்து தங்கியிருக்கும்படியும், தான் அங்கு தலைவியுடன் வருவதாகவும் கூறிச் சென்ருள். தோழி கூறியவாறே, மறுநாள் பகற்பொழுதில் தலைமகன், அவள் குறித்த கடற்கரையின் அருகிற் பொருந்திய புன்னைமரச் சாரலில் தலைவியைச் சந்திப்பதற்காகக் குறித்த நேரத்திற்குச் சற்று முன்னரேயே வந்து தலைமகளின் வருகைக்காகக் காத்திருந்தான். சிறிது நேரத்தில் அவன் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த தலைவி, தன் தோழியுடன் வந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவன் உள்ளம் உவகையால் துள்ளிற்று. தான் முன்னரே அங்கு வந்திருப்பதை, அவர்கள் உணர்ந்திலராதலால், அவர்களைச் சிறிது அசதியாடி மகிழ்வோம் என நினைத்தவனுய், அருகிருந்த புன்னைமரச் செறிவிற் சென்று மறைந்துகொண்டான்.

தலைவியோடு வந்த தோழியோ பலே கைகாரி! தலைவன், தான் குறித்தபடி கடற்கரைக்கு வந்துள்ளான்என்பதை அறிந்தபின்னரே, தலைவியை அழைத்துக்கொண்டு புன்னைமரச் சோலையை நோக்கி அவள் வந்தாள். ஆனுல், தான் குறித்த இடத்தில் தலைவனை அவள் கண்டிலள். எனினும் சற்று முன்பே கடற்கரையை நோக்கி வந்த தலைவன் வேறெங்கும் சென்றிருக்க முடியாது என்பதையும், தலைவியின்பால் அவன் கொண்டிருந்த காதலின் ஆழத்தையும் நன்கு உணர்ந்தவளாகிய அந்தத் தோழி, தலைமகன் நம்மை அசதியாடிக் களிக்கும் பொருட்டு எங்கேனும் மறைந்திருத்தல் உறுதி என எண்ணியவளாய், "நன்று! நம்மை அசதியாடி மகிழ நினைத்த இத்தலைமகனை, யானே அசதியாடி நகைப்பேன்" எனத் தனக்குள் கூறிக்கொண்டு ஒரு சிறிய சூழ்ச்சித் திட்டத்தைத் தன் நெஞ்சத்தில் வகுத்துககொண்டாள். உடனே அருகிருந்த ஓர் மணற்திட்டின் மீதேறி, தலைவியை நோக்கி, "அன்னுய்! புன்னைமரப் பாங்கருற்ற விரிமணற சாரலில், யான் குறித்தபடி இன்னும் நம் தலைவரோ வந்திலர். இவ்வெண் மணல் பரப்பு அவர் வாராததால் வெறிச்சென்றிருக்கிறது. நான் என் செய்வேன்? காலமோ கடந்துகொண்டிருக்கிறது. மீன் பிடித்தற்குக் கடல்மேல் சென்ற நம் தமையன்மார்களின் மரக் கலங்களோ கரையை நோக்கி விரைந்துகொண்டிருக்கின்றன" என்று கூறுகிருள். அந்தப் பாடல் இதோ:-

"இருள் திணிந்தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக்குவித் தன்ன வெண்மணல் ஒருசிறைக்
கருங்கோட்டுப் புன்னைப் பூம்பொழில் புலம்ப
இன்னும் வாரார் வருஉம்
பன்மீன் வேட்டத் தென்னையர் திமிலே"

(குறுந்தொகை—123)

குறிப்பு:- வேட்டத்து — என்னையர் என்பது வேட்டத்தென்னையர் என மருவியது, திமில்—படகு அல்லது மரக்கலம்; கோடு—கொம்பு அல்லது கிளை.

தலைமகன் - தலைவி-இவர்களின் இந்தச் சந்திப்பு களவின்பால் நிகழ்வதொன்ருகலின், கடல்பால் சென்ற தலைவியின் தமையன்மார்கள் திரும்பிவிட்டால் களவொழுக்கம் நிகழ முடியாது என்ற கருத்தைத் தோழியின் வாயிலாக ஆசிரியர் ஐயூர் முடவனர் கூறும் கூறி விளக்குகிருர். இவ்வாறு தமையன்மார்கள் வருகிருர்கள் என்று கூறின், மறைந்துள்ள தலைமகன் அச்சத்தால் உடன் வெளிவருவான் என்பதே அந்த தோழியின் அரிய திட்ட[ம்]. தன்னை அசதியாடற் பொருட்[டு] தலைவியை நோக்கித் தமையன் மார்கள் வருகிருர்கள் என தோழி கூறுகிருளோ என தலைமகன் ஐயுருத வண்ண

அருகிருந்த ஓர் மணற் திட்டின் மேலேறி, கடலிடைக் கலங்கள் விரைந்து வருவதை உண்மையாகக் காண்பவளைப்போல் நடிக்கிருள். இந்தச் சுவை கெழுமிய நாடகம் எவ்வளவு இயற்கையாக அமைக்கப்பட்டுள்ளது பாருங்கள்!

* * *

மேற்குறித்த அசதியாடல் நிகழ்ச்சியைப் போன்ற பிறிதொரு நிகழ்ச்சி நற்றிணைப் பாடல் ஒன்றில் வெகு அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகைப் பாடலில், தலைமகன் புன்னை மரச் செறிவில் மறைந்து தலைமகளை அசதியாட நினைத்ததைக் காண்கிறோம். நற்றிணைப் பாடலில், அதன் ஆசிரியர் அம்மூவனுர் தலைமகனை அசதியாடி மகிழ எண்ணும் தலைவியொருத்தி "புன்னை மரச் செறிவில் சென்று நாம் மறைந்துகொள்வோம் வா" என்று தன் தோழியை அழைக்கும் நிகழ்ச்சியைத் திறம்பட நமக்கு அளித்துள்ளார்.

பாய்ந்து வரும் புரவிகள் பூட்டப்பட்ட தேரூர்ந்து தலைமகன் ஒருவன் தன் தலைவியைக் காணுதற் பொருட்டு விரைந்து வருகிருன். புன்னை மரச் சோலையொன்றின் அருகே அவர்கள் சந்திப்பதாக அவர்களுக்குள்ளே முன்னேற்பாடு. அதற்கிணங்க தலைவியும் தோழியும் குறியிடத்தே முன்னரே வந்து தங்கி இருந்தனர். தலைவியைக் காணுதற் பொருட்டு, தலைமகன் ஊர்ந்துவந்த தேரினின்று எழுந்த மணியோசையும், தேர்ஊர்ந்து வருவதை அறிவித்து ஏவலாளர்கள் எழுப்புகின்ற ஒலியும் தலைவியின் செவிகளில் வந்து புகுகின்றன. காதலன் வரவறிந்த தலைவி களிப்பெய்துகிருள். தலைவனைச் சிறிது நேரம் அசதியாடி அவன் படும் அல்லலைக் கண்டு அக மகிழ எண்ணுகிருள். உடனே தோழியை நோக்கி, "அம்ம! நமது தலைவரின் வருகையை அவர் ஊர்ந்து வருகின்ற தேரிடைப் பொருந்திய மணியோசையும், அத்தேர் வருவதை அறிவிக்கும் ஏவலாளர்களின் ஒலியும் நமக்கு உணர்த்திவிட்டது கண்டாய்! என் உள்ளங் கவர்ந்த கள்வராகிய என் தலைவர் நம்மைக் காண்பதற்கு முன், இவ்வெண் மணற் பரப்பில் உயர்ந்து விரிந்த புன்னை மரச் செறிவில் சென்று நாம் மறைந்து கொள்வோம் வருவாயாக! நாம் அவ்வாறு மறைந்து கொண்டால் இப்பொழிலிடத்து நம்மைக் காணுது அவர் மிகவும் வருந்துவார். அவ்வருத்தத்தினைக் கண்டு சற்று நாம் மகிழ்வோமாக" என்று கூறுகிருள். அந்தப் பாடல் பின்வருமாறு :-

இவர்பரி நெடுந்தேர் மணியும் இசைக்கும்
பெயர்பட இயங்கிய இளையரு மொலிப்பர்
கடலாடு வியலிடைப் பேரளிப் பொலிந்த
திதலை யல்குல் நலம்பா ராட்டிய
வருமே - தோழி! வார்மணற் சேர்ப்ப
னிறைபட வாங்கிய முழவுமுதற் புன்னை
மாவரை மறைகம் வம்மதி பானுட்
பூவிரி கானற் புனர்குறி வந்துநம்
மெல்லிணர் நறும்பொழிற் காணு
அல்ல லரும்படர் காண்கநாஞ் சிறிதே.

(நற்றிணை - 307)

இப்பாடலில் ஆசிரியர் பெண்மையின் உள்ள உளைச்சலை ஒரு புதுக்கோணத்தில் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிருர். காதலன் படும் துயர் கண்டு களிகொள்ள விரும்புகிருள் அந்தக் காதல் காரிகை. அதிலே அவளுக்கு ஓர் அலாதியான இன்பம். இக் கவிதையில் ஊடல் உவகையை ஒரு புது முறையில் நமக்கு ஆசிரியர் அளித்துள்ளார். சாதாரணமாக, பண்டை இலக்கியங்களில் எல்லாம், தலைவியும் தலைவனும் இணைந்துள்ளபோதே ஊடல் நிகழ்தலையும், அவ்வூடல் பின்னர் கூடல் இன்பத்தைப் பெருக்கும் ஆற்றலையுமே நாம் வெகுவாகக் காண்கிறோம். தலைவன் அறியாத வண்ணம், தலைவி அவனை அல்லல் அரும்படருறச் செய்து, அது கண்டு களிகூர எண்ணும் இந்தப் புதிய ஊடல் முறை உண்மையிலேயே சுவைத்து இன்புறற்பாலதாகும்.

ஒருவன் தான் இழந்த பொருளொன்றினைத் திரும்பக் கிடைக்கின்றபோது, அப்பொருளை அவன் முதற்கண் அடைந்தபோது பெறும் இன்பத்தினும் பன்மடங்கு இன்பத்தினைப் பெறுவது கண்கூடு. அதைப்போலவே காதலியைத் தேடிவந்த காதலன், தான் குறித்த புன்னைமரச் சோலையருகில், அவ்வேந்திழையைக் காணுது ஏமாற்றம் கலந்து நிற்கும்போது, சிறிது நேரத்தில் அவள் அந்த இடத்திலேயே இருப்பதைக் காண்கின்ருன் என்ருல், அவன் பெறுமின்பமும் மட்டிலடங்காததொன்றன்றோ?

மேற்குறித்த செய்யுள்கள் இரண்டிலும் 'அங்கதம்' என்று சொல்லப்படும் ஒருவித சுவை துளிர்ப்பதை நாம் காணலாம். இது ஆங்கிலத்தில் 'செடயர்' என்ற சொல்லால் குறிக்கப்படும். இவ்வங்கதத்தின் இலக்கணத்தினை தொல்காப்பியர் பின் வருமாறு கூறுகிருர்.

"வசையொடும் நசையொடும் புணர்ந்தன்
றுயின்
அங்கதச் செய்யு ளென்மனர் புலவர்"
"அங்கதந் தானே அரிதபத் தெரியின்
செம்பொருஇ கரந்த தெனவிரு வகைத்தே"
"மொழிகரந்து சொல்லினது பழிகரப்பாகும்"

அங்கதம் ஒருவனின் குறையையோ அல்லது சமூகத்தின் குறையையோ, உறுத்தும்படி கூறுவது. அது செம்பொருள் அங்கதம், பழிகரப் பங்கதம் என இருவகைப்படும். ஒரு பொருளை வெளிப்படையாக நகைச்சுவை தோன்றக் கூறுவது 'செம்பொருள் அங்கதம்' எனப்படும். நகைச்சுவை தொக்கி நின்று பொருளுணர்த்துமேல் அது 'பழிகரப் பங்கதம்' எனப்படும். இக் கட்டுரையில் குறுந்தொகைப் பாடல் செம்பொருள் அங்கதத்திற்கும் எடுத்துக்காட்டாக உள்ளன. கலைவாணரின் நகைச்சுவை பழிகரப்பு அங்கதத்தின் பாற்படும். 'செடயர்' அல்லது அங்கதம் எனும் சுவை சொற்பொழிவுக்கு இன்றியமையாத பல பண்புகளில் ஒன்ருகும். இப்பண்பு நாவன்மை மிக்க சொற்பொழிவாளர்களான எட்மண்ட் பர்க் போன்றவர்களின் சொற்பொழிவுகளில் மிகுதியாகக் காணலாம். அங்கதம் சொற்பொழிவுக்கு மட்டுமன்றி கவிதை, நாடகங்கள் இவற்றிற்கும் இன்றியமையாத ஒரு கூறெனில் அது மிகையாகாது.

சுவையும் மணமும் கெழுமிய சொன்மலர்கள் மண்டிக்கிடக்கும் தமிழ்ப் பூங்காவில், சிறிது சிறிதாக முளைத்து, அந்த நறுவிய தமிழ் மலர்களை அரித்திட முயலும் வேற்றுமொழிக் காளான்களையும் கள்ளிகளையும் வேரோடு களைந்தெறியத் தமிழ் மறவரும் மகளிரும் தளராது உழைக்க முன் வராவிட்டால், இன்பத் தேன் பிலிற்றும் எழில் மலர்க்கடாகிய தமிழகம், கள்ளிக்காடாக வன்றே ஆகிவிடும்?

★

# "திக்கற்றோரின் தேற்றரவாளன்"

[இரா. மாணிக்கம்]

அவர்!......ஓர் ஆசிரியர். ஆம் அவர் ஓர் பள்ளியாசிரியர்தான். பிற்பகல் பள்ளி முடிந்தது. கதவுகளைப் பூட்டினார். தன் இல்லம் நோக்கி ஏகினார். பள்ளிப் பிள்ளைகளின் நல்வாழ்வைப்பற்றி எண்ணியவாறே நடந்தார். கந்தலாடையும் கலைந்த முடியும் கொண்டவனைத் தெருவின் ஓரத்தில், ஓர் மூலையில் ஆழ்ந்து தூங்கும் ஓர் சிறுவன் அவரின் சிந்தனையைத் தன்பக்கம் இழுத்தான். அவரும் அவன் அருகில் சென்றார்.

தம்பி...எழுந்திரு. ஏன் இங்கு தூங்குகின்றாய்? உன் அன்னையிடம் செல்வதுதானே!

ஐயா! எனக்கு அன்னை இல்லையே!

தந்தை!

அவரும் இல்லை.

உன் வீட்டிற்காவது செல்லக் கூடாதா?

அதுவும் எனக்கில்லையே!

உன் நண்பர்கள் வீட்டிற்காவது செல்லலாமே!

நண்பர்கள் கூட எனக்கு இல்லை ஐயா......

தாயுமில்லை! தந்தையுமில்லை! நண்பர்களும் இல்லை! இருக்க இல்லமும் இல்லை! ஒருவேளை இவன் பொய்யுரைக்கின்றானோ? இவ்வாறு எண்ணிய ஆசிரியர் தன் அனுபவத்தில் இத்தகைய சிறுவனைச் சந்தித்ததேயில்லை என அவருக்குள் கூறிக்கொண்டார்.

அச்சிறுவன் கூறியது அத்தனையும் உண்மையென்பதனை ஆசிரியர் சிறிது நேரத்தில் அறிந்துகொண்டார். ஆசிரியரின் உள்ளம் எல்லையில்லாத் துன்பமடைந்தது. அவன் பெயர் 'ஜிம் ஜார்விஸ்'. இலண்டன்மாநகரத்தின் தெருக்களில் இரந்தும், திருடியும், மூட்டை தூக்கியும் தன் துன்ப வாழ்வினைக் கழித்து வந்தான். குப்பைத் தொட்டிகளும், தெருவின் ஓரங்களில் நிற்கும் சீரழிந்த வண்டிகளுமே அவனது உறைவிடம். படிப்போ, பாதுகாவலோ இல்லாத அவன் ஒளிவிடும் கண்களுடனும், சுறுசுறுப்புடனும் இருந்தான். பத்து வயதினையடைந்த அவன் தொல்லை பல கண்டுவிட்டவன். அரசாங்கக் காவலரின் கண்களில் மண்ணினைத் தூவித் தன் காலத்தினைக் கழித்து வந்தான்.

ஆசிரியர் அச்சிறுவன் அவலநிலையினைக்கேட்டு, "ஓ! என்நாடே! இச்சிறுவனைப் போன்று இன்னும் எத்தனை சிறுவர்களைத் தன்னில் அடக்கி வைத்திருக்கின்றாயோ?" என்று கேட்டார். 'ஜிம்'மின் உதவியால் அவனைப்போன்று அல்லலுறும் சிறார்களைக் கண்டுபிடித்தார். ஏன்? சல்லடைபோட்டாற்போல் சலித்து எடுத்தார்.

அன்றே அவரது உள்ளம் அனாதைப் பிள்ளைகளின் அவல வாழ்வினைப் போக்கும் அரிய பணியினைத் துவக்கும்படி தூண்டியது. துவக்கினார் தன் பணியினை. ஆயிரமாயிரம் சிறுவர்களின் கண்ணீர்த் துளிகளைப் போக்கினார். கவலையை நீக்கினார். அவர் பெயரால் ஆங்கில நாடு பூராவும் அனாதை இல்லங்கள் பல தோன்றின. சிறுவர்களின் வாழ்வினைச்செம்மைப்படுத்திய அச்செம்மல் அந்நாட்டுக்கு நல்ல பல மருத்துவர்களையும், வழக்கறிஞர்களையும், பேராசிரியர்களையும், புலவர் பெருமக்களையும், கலைஞர்களையும், ஆளும் அமைச்சர்களையும் ஆக்கித்தந்துதவினார்.

அத்தகைய தூய உள்ளங்கொண்ட ஆசிரியரின் பெயர் **டாக்டர் தாமஸ் ஜான் பர்னார்டோ.** 1845-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாள் அயர்லாந்து நாட்டினைச் சேர்ந்த டப்ளினில் பிறந்தார். இளமையிலேயே ஆழ்ந்த அறிவும், மாற்றார்க்குப் பணிபுரியும் ஆர்வமும் கொண்டவராயிருந்தார். பள்ளிப் படிப்பிலே நாட்டமில்லாத அவர் தனியாகப் பயனுள்ள நூல்கள் பலவற்றைத் தெளிவுறக் கற்றார். ஏதேனும் தொழில் செய்ய எண்ணிய அவர் அதனையும் விட்டார். மக்கட்குத் தொண்டுபுரிய எண்ணினார்.

அன்றோர் நாள் சீனா சென்று மதத்தொண்டு செய்ய மதகுருவிடமிருந்து அழைப்பு வந்தது. அழைப்பினை ஏற்று இலண்டனுக்கு விரைந்தார். மதக்கல்வி தவிர்த்த நேரங்களில் அனாதைப் பிள்ளைகளின் பள்ளியில் ஆசிரியப் பணி புரிந்தார். தன் முயற்சியால் தானே ஓர் அனாதைப் பள்ளி ஆரம்பித்தார். சீனா சென்று தொண்டாற்றுவதைவிட "நாட்டு மக்கட்கு ஆற்றும் தொண்டே சிறந்த தொண்டு" என்பதனை நன்குணர்ந்தார். ஓர் நாள் மாபெரும் பொதுக்கூட்டமொன்றில் சொற்பொழிவாற்றும் வாய்ப்புக் கிட்டியது. வாய்ப்பினை நழுவவிடாது, "வளமில்லா, வறண்ட சிறுவர்களின் வாழ்க்கையைச் சீர்திருத்துவதே உண்மையான மதத் தொண்டெனக் கூறி" ஆங்கு குழுமியிருந்த மக்களைத் தன்வயப் படுத்தினார். மக்கள் திரளோ பர்னார்டோ சொல்லுவது அத்தனையும் உண்மை உண்மை என ஒலி முழக்கினர்.

கூட்டம் முடிந்து அவர் வீடு திரும்பினார். மதக்குருக்களின் பணிக்காக மாற்றார் குடும்பங்களில் பணியாற்றி வந்த ஓர் வேலைக்காரி பர்னார்டோவின் கையில் பணமுடிச்சு ஒன்றினைக் கொடுத்துப் பறந்தோடிவிட்டாள். அம் முடிச்சில் இருபத்தேழு பார்த்திங்குகள் இருந்தன. அதுவே அவரது புனிதப் பணிக்கு அளிக்கப்பட்ட முதல் காணிக்கை.

நாட்கள் பல நகர்ந்தன. சூது மதியினர் சூழ்ச்சி வலை வீசினர். "அனாதைப் பிள்ளைகள் இன்னும் நம் நாட்டில் ஏராளம் பேர் உள்ளனர் என்று பர்னார்டோ கூறுவது அத்தனையும் பொய்" எனக் கதை கட்டினர், நல்ல பணிக்கு எங்கும் எதிர்ப்பு இருப்பது இயல்புதானே! அதுபோழ்து சுரங்கங்களிலும், தொழிலகங்களிலும் பெருநகரங்களிலும் பணியாற்றிய எத்தனையோ ஏழைச் சிறுவர்களின் வாழ்க்கையை வளம் கொழிக்க வைத்த ஷாப்ட்ஸ்பரி பிரபு என்பார் டாக்டரைக் கூப்பிட்டு அம்மாதிரி அனாதைக் குழந்தைகளை எனக்குக் காட்ட

முடியுமா? எனச் சற்றுக் காட்டத்துடன் கேட்க — அதற்கென்ன. இப்போதே தயார்! புறப்படுவோம் வாரீர்! போவோம்! என அனாதைக் குழந்தைகளின் இருப்பிடத்துக்கு இட்டுச் சென்று அல்லலுறும் வருங்கால இளைஞர்களின் எழிலற்ற வாழ்க்கையினைக் காட்டினார். ஷாப்ட்ஸ்பரி பெரிதும் வருந்தி பர்னார்டோவின் பணிக்குத் தன்னாலான உதவியனைத்தும் அளிப்பதாகக் கூறி டாக்டரை மேலும் உற்சாகப்படுத்தினார்.

ஆரம்பத்தில் பயனற்ற கழுதைக் கொட்டகையில் ஆரம்பித்த அனாதை இல்லமானது பின் இரண்டு குடிசைகளில் குடியேறிற்று. இடம் போதாத காரணத்தால் இன்னுமோர் கட்டடத்தை வாடகைக்கு வாங்கினார். அனாதைகளின் நல் வாழ்வுப் பணிக்காக அவர் யாரிடமும் கடன் பெறவில்லை. நல்ல உள்ளம் படைத்தோர் கொடுத்த நன்கொடையைக் கொண்டே திறம்பட நடத்தினார் தாம் மேற்கொண்ட பணியினை. யாரையும் சோம்பேறியாய் விடாது அனைவர்க்கும் விருப்பமான கல்வியும், தொழிலும் கற்பிக்கப்பட்டது. இல்லத்துக்கு உதவுவோரைவிட, உதவி நாடி வந்தோரே ஏராளம். இதற்கிடையில் சிறுவர்களின் உடல் நலத்தைப் பேண மருத்துவத் துறையிலே தேர்வு எழுதி 'டாக்டர்' பட்டமும் பெற்றார்.

ஓர் நாள் 'காரட்ஸ்' என்னும் சிறுவன் அனாதை இல்லத்தில் சேர விரும்பினான். இட நெருக்கடியால் இன்னும் ஒருவாரம் கழித்து வரும்படி டாக்டர் அவனிடம்கூறி அவனது ஒருவாரச் செலவுக்குச் சிறிது பணமும், ரொட்டியும் கொடுத்தனுப்பினார். ஆனால், அந்தோ! அச்சிறுவன் ஒரு வாரத்துக்குப் பின் குளிராலும், நோயாலும்தொல்லைபட்டு இறந்து போன செய்தியைக் கேள்விப்பட்ட டாக்டர் ஆழ்ந்த கவலையுற்று, அன்றே அவரது அனாதை இல்லத்தின் முன் "உதவி நாடி வரும் எந்த அனாதைக்கும் எச்சமயத்திலும் இனி உதவி மறுக்கப்படமாட்டாது" எனக்கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் செய்தார் என்றால், என்னே அவரது தொண்டு. சிறுவர்களின் அவலநிலையைப் போக்கிய டாக்டர் சிறுமிகளின் வாழ்க்கையையும் செம்மைப் படுத்தினார்.

டாக்டரின் சீரிய தொண்டுகள் அவருக்குப் பல எதிரிகளைச் சம்பாதித்துக் கொடுத்தது. சிலர், "அனாதைகளுக்காகக் கொடுக்கப்படும் நன்கொடைகளைத் தனக்காக வைத்துக் கொள்ளுகின்றார்" எனக் கதை கட்டினர். சிலரோ "அனாதைப் பிள்ளைகட்கு அரை வயிற்றுக் கஞ்சியே கொடுக்கப்படுகிறது" என்றனர். இன்னும் சிலரோ "பொது விசாரணை" தேவை என்றனர். பொது விசாரணையும் நடந்தது. கணக்குகளும் தணிக்கை செய்யப்பட்டன. கணக்குகள் யாவும் சரியெனத் தணிக்கையாளர் தீர்ப்புக் கூறினார். நீதிவென்றது! நேர்மைநிலைத்தது! தொண்டு துரிதமாக முன்னேறத் தீர்ப்பு வழிகோலியது. வன்சொல்லாளரின் வாய்கள் பூட்டப்பட்டன.

இருப்பினும் தொல்லை கொடுப்பதே தொழிலாகக் கொண்டோர் பர்னார்டோ குழந்தைகளைத் திருடுகிறார் எனக் குற்றஞ் சாட்டி கொடுமை பல கொடுத்தனர். நீதி மன்றம் ஏற்றினர். என்றாலும் வெற்றி டாக்டருக்கே. இதனையெல்லாம் ஆய்ந்த ஆங்கில நாட்டுப் பாராளு மன்றம் பெயர் பெற்ற "பர்னார்டோ சட்டம்" என்பதனை 1891-ஆம் ஆண்டு இயற்றி பர்னார்டோ போன்றார் நடத்தும் பள்ளிகளுக்கு எவ்விதத் தொல்லையும் கொடுக்கக்கூடாது எனப் பாதுகாப்பளித்தது. டாக்டர் தம் வாழ்நாள் பூராவும் அறுபதாயிரம் சிறுவர்களின் வாழ்க்கையைச் செம்மைபடுத்தி, இன்றும் உலகின் நானா பக்கங்களிலும் பர்னார்டோவின் இல்லத்தைச் சேர்ந்தோர் பலர் இருக்கக் காணும்படி சிறந்த தொண்டாற்றிய அப்பெம்மான், பெரியோன் 1905-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

வாழ்க அவர் பணி! வளர்க அவரது தொண்டு !!

★

# "நீ, என்றேன் நான்"

அன்பும் அறமும் உடைய இல்லறத்திலிருந்து வழுவித் தலைவன் திடீரென ஒருநாள் பாணனது உதவியின் மூலம் பரத்தைவீடு சென்றுவிடுகிறான். தலைவி, தலைவனது பிரிவால் சொல்லொணாத்துயருறுகிறாள். நீரைப் பிரிந்த மீனைப்போல் துடிக்கிறாள்.

தோழி அவ்வப்போது 'எப்படியும் தலைவன் திரும்பிவிடுவான்' என்ற நம்பிக்கையைத் தலைவிக்கு ஊட்டி வருகிறாள்.

சில நாட்களில், பாணன்தான் தலைவனை இவ்வாறு பரத்தையர் சேரிக்கு அழைத்து சென்றிருக்கிறான் என்ற உண்மை தோழியின் மூலம் தலைவிக்கும் தெரிந்துவிடுகிறது.

இத்தகைய இழி செயலைச் செய்த பாணனுக்குத் தக்க பாடம் கற்பிக்க வேண்டுமெனத் தலைவியும் தோழியும் எண்ணித் திட்டமிடுகின்றனர். திட்டம் உருவாகிறது. பாணனது வருகையை எதிர்பார்க்கின்றனர்.

இதற்கேற்றாற்போல், பரத்தையின் வீட்டிலிருந்த தலைவன், பாணனைத் தன் வீட்டுக்குத் தூதாக அனுப்புகிறான். அவ்வாறே பாணனும் தூதுவனாகத்தலைவியின்வீட்டை அடைகிறான். தலைவியும் தோழியும் தயாரித்து வைத்திருந்த திட்டம் செயல்படத் தொடங்குகிறது!

தலைவி, பாணன் மீதிருக்கும் சினத்தையெல்லாம் வெளிக்குக் காட்டாமல் மறைத்து அவனிடம் பேசுகிறாள்;

"புகழுடைய பாண! நீ தினந்தோறும் எம் சகோதரியின் (பரத்தையின்) வீட்டிலிருந்துகொண்டு பாடுகிறாய். அவ்வாறு பாடும் உன்னையும் உன் பாட்டின் ஒலியையும், விடிவளவும் காட்டிலழும் பேயொலி என்று என் அன்னை கூறுகிறாள்! மற்றவர்கள் ஊளையிடும் நரியென்று கூறுகிறார்கள்! என் தோழியோ நாய் என்கிறாள்!! ஆனால் நானோ, அவைகளெல்லாம் அல்ல, பாடுவது நீதான் என்றேன்!"

தலைவி தன்னைப் பற்றி வெகுவாகப் புகழப் போகிறாள் என்று எதிர்பார்த்த பாணனின் முகம் வேறுபடுகிறது!

பரத்தையின் வீட்டிலிருந்த தலைவனால், தூதாக அனுப்பப்பட்ட பாணனைத் தலைவி புகழ்வதுபோல் இகழ்ந்து கூறுவதாகப் பாடப்பட்ட இவ்வெளிய பாடல் நந்திக் கலம்பகத்தில் உள்ளது. இப்பாடலின்நகைச்சுவைப் பயன் எண்ணிப் போற்றுதற்குரியது.

**ஈட்டு, புகழ்நந்தி பாண! நீ எங்கையர்தம்**
**வீட்டிலிருந்து பாட விடிவளவும் - காட்டிலழும்**
**பேயென்றாள் அன்னை! பிறர் நரியென்றார்; தோழி**
**நாயென்றாள்! நீ என்றேன் நான்.**

—அன்பு.



# "குட்டித்தீவில்" விடுதலை முழக்கம்!

இத்தாலி நாட்டுக்கு அருகே, மத்தியதரைக் கடலில் உள்ள ஒரு சின்னஞ்சிறிய "குட்டித்தீவு" மால்டா. அதுதான் உலக வல்லரசான பிரிட்டனை எதிர்த்து சுதந்திரக் கொடி உயர்த்தியுள்ளது!

"பிரிட்டன் பிடியிலிருந்து வெளியேறுவோம். எங்கள் விடுதலை வேட்கையை எவராலும் தடுத்து நிறுத்திவிடமுடியாது. அணுகுண்டு போட்டாலும் சரி, ஹைட்ரஜன் குண்டுகளை வீசினாலும் சரி, எங்கள் விடுதலை முழக்கம் ஓயாது! மால்டாவை அடக்கி ஆள எவரேனும் எண்ணினால் அவர்கள் தோல்வியைத் தழுவுவது நிச்சயம்!"—இப்படிப் பேசியிருக்கிறார் குட்டித்தீவு மால்டாவின் பிரதமர் **'மின்டோப்'** என்பவர்!

மால்டாதீவு தற்போது பிரிட்டனின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக இருந்து வருகிறது. இதற்கு ஒரு தனி சர்க்கார் இருக்கிறது. இது பிரிட்டனின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு இயங்கிவந்தது! அந்தச் சர்க்காரின் பிரதமர் தான் மின்டோப்! அவர்தான் இன்று மால்டாவின் சுதந்திரத்தில் தலையிட எவருக்குமே உரிமையில்லை என வீரமுழக்கமிடுகிறார்!

மால்டாதீவின் நிலப்பரப்பு 122-சதுரமைல்களாகும். அங்கு வசிக்கும் மக்கள் தொகை மூன்று இலட்சத்து இருபதினாயிரம்பேர். அதாவது நமது சென்னை நகர மக்கள் தொகையில் நான்கில் ஒருபகுதி, மதுரை நகர் மக்கள் தொகையில் பாதி!

மூன்றே லட்சம் மக்கள் வாழும் மால்டா, அன்னியன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளப் போராடுகிறது! ஆனால் மூன்றரைக்கோடி மக்களைக் கொண்ட நமது தமிழகம் தனி நாடாகப் பிரிந்தால் வாழுமா என வினாவெழுப்புகின்றனர் சிலர் இங்கு! அழுவதா இல்லை சிரிப்பதா?

மால்டாவாழ் மக்களுக்கு மிகப் பெரிய தொழில் அங்குள்ள பிரிட்டிஷ் கப்பற்படைத்தளத்தில் கூலியாக வேலை செய்வதுதான்! பல்லாயிரம் மக்கள் அங்கு வேலை பார்க்கின்றனர். அந்தக் கப்பல் தளத்தை பிரிட்டன் மூடிவிடப் போவதாக அறிவித்தது. அது கேட்டு மால்டா வாழ் மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். வேலையிழந்து தவிக்கும் ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேறு வழி என்ன என மால்டா சிந்தித்தது!

வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு வேறு வேலை தரவேண்டும் என மால்டா சர்க்கார் பிரிட்டனைக் கேட்டது. ஆனால் பிரிட்டன் மறுத்துவிட்டது.

விளைவு......?

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வது என மால்டா முடிவு செய்தது. இந்த முடிவை அறிவித்து மாபெரும் தொழிலாளர் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் மின்டோப், "பிரிட்டிஷ் ஆட்சியைவிட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை......பிரிட்டிஷ் சர்க்கார் அணுகுண்டு, ஹைட்ரஜன்குண்டுகளை வீசினாலும் எங்களை அடக்கிவிட முடியாது!" என்று முழக்கமிட்டிருக்கிறார்.

"வேலையிழந்து, பட்டினிகிடந்து சாவதைவிட பிரிட்டனை எதிர்த்து, விடுதலைக்காகப் போராடிச் சாவோம்! வேண்டாத ஆட்சியை எதிர்ப்பதில் நாங்கள் அஞ்சவில்லை" என்று கூறுகிறார் மின்டோப்?

"பிரிட்டிஷ் ஆட்சி ஒழிக!" என்ற குரல் இன்று மால்டா முழுதும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது. ஐயாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பிரிட்டிஷ் ஆட்சிமீது தங்கள் வெறுப்பைக் காண்பிக்க ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

"பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து மால்டா தீவு விடுதலை பெறவேண்டும்!" என்று மால்டா சட்டசபை ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது! அதுகண்டு பிரிட்டிஷ் சர்க்கார், வெளியேறும் தீர்மானத்தைக் கண்டித்து மால்டா சர்க்காருக்கு ஒரு அவசரச் செய்தி அனுப்பியுள்ளது!

"பிரிந்தால் வாழுமா?" என வினாவெழுப்பும் "பெரிய மேதைகள்" இதை எண்ணிப் பார்ப்பார்களா?

ரப்பர் தொழிலை மட்டும் நம்பியே 60-இலட்சம் மலேயர், சுதந்திர வாழ்வு வாழ்கின்றனர்!

அண்மையில் விடுதலை பெற்ற "கானா" என்ற ஆப்பிரிக்க நாடு 37-இலட்சம் மக்களைக்கொண்டது தான்!

மற்றும் அல்ஜீரியா, மால்டா போன்ற பல நாடுகள் விடுதலைப் போர் புரிந்து வருகின்றன.

தனிநாடாக சுதந்திரத்துடன் இதுபோன்ற சிறு நாடுகள் எல்லாம் இருக்கும்போது, எல்லா வளமும், செல்வச் சிறப்பும் கொண்ட நம்நாடு ஏன் சுதந்திர நாடாக வாழமுடியாது? துருக்கியைவிட தமிழ் நாடு இருமடங்கு பெரிய தாயிற்றே!

அந்த நாடுகள் எல்லாம் இன்று உலக வல்லரசுகளின் கழுகுப் பார்வையில்பட்டு அழிந்துவிடவில்லையே! மாறாக வல்லரசு நாடுகளை விரட்டியடித்த காட்சிகளைத் தானே கண்டு வருகிறோம்!

வெல்க விடுதலை முழக்கம்!

— கோவை க. இரத்தினம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லுமிடந்தோறும் பேசுகிறார். இவர்கள் யாவரும் பேசும் தொனியில், வழக்கம்போல் ஆத்திரமும் வேகமும் காணப்படுகிறது! தெற்கைக் காட்டிக் கொடுத்து, அந்தக் 'கவுரவத்தின்' மீது, டில்லியின் புன்சிரிப்பையும் ஆதரவையும் பெற்று வருகிறவர்கள் இப்படித்தான் பேசுவார்கள் — டில்லியால், இலாபம் பெறுகிறவர்களல்லவா!!

கொட்டடியில் பூட்டினாலும், தடியடிகளை வீசினாலும், வழக்குகளைப் போட்டாலும், வம்புக் குரல் எழுப்பினாலும், யார் செய்வது நியாயம் என்பதை அறிந்து கொள்ளாமலில்லை, மக்கள். சென்னையில் நடைபெற்ற அட்டகாசங்களைக் கண்டு, "தூ! தூ!! இதுவா, அகிம்சா சர்க்கார்?", என்று, எல்லோரும் பேசுகிறார்கள். அடக்கு முறைகளும், ஆத்திரத் தர்பாரும் நடக்க நடக்க, ஆட்சியின் பலம்தான் சரியும் என்கிற பழைய உண்மை, மக்கள் மன்றத்திலே நிலைநாட்டப்பட்டிருக்கிறது. கொள்கைக்காக—நாட்டுக்காக—மொழிக்காக, செந்நீரும் கண்ணீரும் சிந்துவோர்பால், மக்கள் அனுதாபம் காட்டத்தான் செய்வார்கள்! நமக்குக் கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததையும் — சென்னையில் தடியடி தர்பார் நடத்திய அக்கிரமப் போக்கையும் — ஆளும் கட்சி தவிர, ஏனைய எதிர்க்கட்சிகள் யாவும் கண்டித்திருப்பதிலிருந்தே, நாம் எடுத்த முடிவின், நியாயம் விளங்கும், கொடுங்கோலைக் கண்டிக்க முற்படும் கொள்கை வீரர்கள்பால் அன்பும் அனுதாபமும் வளரச் செய்திருக்கிறது, தென்னகம் காட்டிய உணர்ச்சிப் பொங்கல்! சொந்த மக்களைவிட, பதவிதான் பெரிது என அதிகாரத் தர்பார் நடாத்திடும் ஆள்வோரின் போக்குப் பற்றி, 'சேச்சே!' என கூறாதோரெல்லாம் கூறும்படியான நிலைமையையும் உண்டு பண்ணியிருக்கிறது!!

★

# வாழ்க நடராசன்-சோதி

*26-1-58* ஞாயிற்றுக்கிழமை காலை ராஜா பஸ், ராஜா டாக்கீஸ் உரிமையாளரும், நமது அருமை நண்பருமான டபிள்யூ. கே. தேவராசன் அவர்களின் திருமகன், டி. நடராசனுக்கும் வேலூர் திரு. வி. கே. எம். நடராசனார் அவர்களின் திருமகள் சோதிக்கும் சென்னை பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

திருவாளர்கள் டபிள்யூ. டி. மாசிலாமணி பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, டி. புருஷோத்தமன் எம். எல். சி. காஞ்சி நகர மன்றத் தலைவர் வி. என். பெருமாள், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., ப. உ. சண்முகம், எம்.எல்.ஏ., சி. வி. இராசகோபால், டி. சண்முகம், எம். எஸ். இராமசாமி, கலைஞர் கருணாநிதி, எம்.எல்.ஏ., அ. பொன்னம்பலனார், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், கே. கே. நீலமேகம், இராம. அரங்கண்ணல், புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் வழக்கறிஞர் வி. பி. இராமன், இரா. செழியன், பா. வாணன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., டாக்டர் சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ., நடிகமணி டி. வி. நாராயணசாமி, அன்பில் தர்மலிங்கம், திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், திருமதி அலமேலு அப்பாதுரை, எஸ். விஜயலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தமிழ்த் திருமணங்கள் நாட்டில் நடைபெறவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, இந்தத் திருமண விழாவில் பல சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கின்ற காரணத்தால், தமிழ் வாழ்த்துதலோடு நடத்தப்பெறாத திருமணங்களை செல்லாதவைகளாக்க சட்டம் இயற்ற முயற்சிப்பார்களென்று எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

மாநில முதலமைச்சர் காமராசர், திருவாளர்கள் சி. சுப்ரமணியம், எம். பக்தவத்சலம், எஸ். எஸ். வாசன், எஸ். ஏ. அய்யாசாமி பி. டி. இராசன், எம்.எல்.சி., பி. ஆர். இராசரத்னம், சி. டி. நடராசன், வி. கே. இராமசாமி ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துரைகளும் வழங்கப்பட்டன.

அன்று பிற்பகல் திரு. எம். கே. கோவிந்தராச பாகவதர் அவர்களின் இசையரங்கும், நடன இளவரசி ஈ. வி. சரோஜாவின் நடனமும், இரவு காருக்குறிச்சி அருணசலம் அவர்களின் நாதசுரக் கச்சேரியும் இனிது நடைபெற்றது.

*25—1—58* அன்று இரவு காருக்குறிச்சி அருணசலம் அவர்களின் நாதசுரத்துடனும், வேலூர் வி. கே. குப்புசாமி அவர்களின் பாண்டு வாத்யத்துடனும், தஞ்சாவூர் டி. வி. பாபு அவர்களின் பொய்க்கால் குதிரை நாட்டியத்துடனும் மணமகள் அழைப்பு நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்து மணமகள் அழைப்பையும், திருமண விழாவையும் சிறப்பித்தார்கள்.

அண்ணா அவர்களது நன்றி கூறலுடன் திருமண விழா இனிது முடிந்தது.

# ஒருநாள் முன்னதாக!!

—[W]—

### நேரு வந்தார்
### தலைவர்கள் அனைவரும் கூடினர்
### பெரிய பந்தல்கள் உண்டு
### சிறு நகரமே நிறுவப்பட்டது.
### இலட்சக்கணக்கான ரூபாய் செலவு
### ஆனால்
### மாநாடு ஒரு நாள் முன்னதாகவே முடிவுற்றது.
### காரணம்
### மக்கள் இல்லாதது!!

*

உனக்கென்ன வேலை! இப்படி, காங்கிரசென்றால் ஏதாவது இழித்தும் பழித்தும்தான் பேசத் தெரியும்!—என்று தேசியத் தோழர்கள், கோபம் கொள்ளக்கூடும். உண்மை நண்பர்களே, உண்மை—நாம், கௌகத்தி போகவில்லை—நமது நிருபரையும் அனுப்பவில்லை—காங்கிரஸ் ஏடுகளே இவ்விதம் கண்ணீர் சொரிய வெளியிடுகின்றன.

"பிரதிநிதிகள் சார்பில் வரவேற்புக் கமிட்டிக்கு நேருஜி நன்றி கூறினர். சங்கடங்கள் இருந்தபோதிலும், மகாசபைக்கு நன்றாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக அவர் பாராட்டினர். நேருஜி அவ்விதம் புகழ்ந்தபோதிலும், மகாசபையை ஒட்டிய வழக்கமான உற்சாகம், ஜனத்திரளைக் காணோம்"

என்கின்றன ஏடுகள்! இந்த மாநாட்டினைப் பற்றியும் அங்கு செய்யப்படும் ஏற்பாடுகளைப் பற்றியும், வானளாவப் புகழ்ந்தார்கள்—இந்தியத் துணைகண்டத்திலுள்ள ஏடுகளிலெல்லாம், விளம்பரங்கள் வந்தன — விளக்கக் குறிப்புகள் தரப்பட்டன.

63-யானைகள் ஊர்வலம் சென்றனவாம்! அலங்காரமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவாம்!

இந்தியத் தலைவர்கள் எல்லோரும் வருவார்கள் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாம்!

இருந்தும், மக்கள் வரவில்லை—இதுபோல மோசமாக நடைபெற்ற மாநாடே காங்கிரஸ் சரிதத்தில் இல்லை என்று தலைவர்களே கூறுமளவுக்கு விநோதமாகயிருந்திருக்கிறது, மாநாடு. தப்பித் தவறி வந்தவர்களும் எங்கே இருந்தார்களாம் தெரியுமா? கனல் கக்கப் பேசும் நேரு, தலைமைப் பிரசங்கம் செய்யும் தேபர், வெளி மாகாணங்களிலிருந்து வந்திருப்பவர்களின் பேச்சுகள், இவைகளைக் கேட்க வரவில்லை! மாறாக, பக்கத்தில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த "மிருகக் காட்சி சாலையில்" வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றனராம்!!

அந்த மிருகக் காட்சியும் ஏற்பாடு செய்யப்படாமலிருந்திருந்தால், வந்த கூட்டத்தில் பெரும் பகுதி, வந்திருக்காதுபோலும்.

மாநாட்டில், ஏதாவது வசதிக் குறைவுகளோ என்றால், கிட்டத்தட்ட கால்கோடி ரூபாய் செலவானதாகக் கூறப்படுகிறது! சிறியதோர் நகரமே அமைத்திருந்தார்களாம்!! இருந்தும், மக்கள் செல்லவில்லை, மாநாட்டுக்கு. இதன் காரணமாக, ஒரு நாள் முன்னதாகவே, மாநாட்டினை முடித்துக்கொண்டு அவரவரும் கிளம்பியிருக்கிறார்கள்.

**ஒருநாள் முன்னதாக! மக்கள் இல்லாமையால்!**—உண்மையில், இது ஒரு பெரிய சோகச்சம்பவம் என்போம். நாடாளுகிறது, காங்கிரஸ்-அதனை ஆட்டிவைக்கும் நேருபிரானின் புகழ் அகில உலகத்திலும் பரவியிருக்கிறது—எங்கு சென்றாலும் அவர்புகழ்பாடப்படுகிறது இப்படியிருக்கும்போது, காங்கிரஸ் மகாசபை கூடுகிறது, மக்கள் சரிவர வராததால் ஒரு நாள் முன்னதாகவே கலைகிறது, என்றால், இதை விட திகைப்பான ஒரு சம்பவம் இருக்கமுடியாது.

டிக்கட் கட்டணம் அதிகம்! மாநாடு கூடிய சுற்று வட்டாரத்தில் இலட்சக்கணக்கில்தான் மக்கள் தொகை!!—என்று காரணம் காட்டப்படுகிறது. இதெல்லாம், மிகமிகச் சாதாரணக் காரணங்கள். கட்டணம் கட்டக் கவலைப்படும் காத்தானும் முத்தனுமா இன்று காங்கிரசில் இருக்கிறார்கள். ஒரு இலட்சம் பேருக்கு டிக்கட் வாங்கிக் கொடுத்து உள்ளே அழைத்து வரக்கூடிய டாடாக்கள் உண்டே!!

இது ஒருபுறமிருக்க, தப்பித் தவறி வந்தார்களே அந்த மக்களும், தீர்மானங்களும் தீப்பொறி பறக்கும் பேச்சும் நிகழும் இடத்திலா இருந்தார்கள். அல்ல! அல்ல!! வேடிக்கை பார்க்கும் மிருகக் காட்சிசாலையில் இருந்திருக்கிறார்கள்.

என்ன பொருள்? மக்களுக்கு காங்கிரஸ் மகாசபை மீதும், அது செய்திடும் காரியங்கள் மீதும், முன்புபோல ஆர்வமும் ஆசையும் இல்லை! வரவர, அது குறைந்து கொண்டே வருகிறது!!

வட்டாரக் கமிட்டிகள் அமைக்கலாம் — பிரசாரகர்களை நியமிக்கலாம்—எதிர்க் கட்சிகளை கண்டபடி ஏசலாம்—இதனாலெல்லாமா, காங்கிரஸ் வளர்ந்துவிட முடியும்.

காண்கிறோமே, சுதந்திர நாள்—குடியரசுத் திருநாள்—என்பவை எவ்வளவு சோபிதமற்று உள்ளன. அலுவலகங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும்தான், விழாவின் அறிகுறியாக வெளிச்சமும் அலங்காரமும் உள்ளதே ஒழிய மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமுமா இருக்கிறது? எப்படி யிருக்கும்?

தேர்தல்கள் வந்தால், எப்படியோ பணநாதன் அருள் தனக்கிருப்பதைக் கொண்டு, வெற்றி பெறுகிறார்கள்! சிண்டு முடித்து விட்டும், எதிர்க் கட்சிகளுக்கு வாய்க் கட்டுப் போட்டும், எப்படியாவது தேர்தலில் வெற்றி கொள்ள முயற்சிக்கிறார்கள். அது தவிர, முன்போல, மக்களின் இருதயங்களில் காங்கிரசுக்கு இடமுண்டோ! ... இதில்தான், கௌகத்தி காங்கிரஸ் !!

★

# சண்முகசுந்தரனார்

ஏணியின் கீழ்ப்படியிலிருந்து ஒவ்வொன்றாக ஏறி உச்சிக்குப் போவதற்குப் பெருமுயற்சி தேவை, உறுதி தேவை, உழைப்பு தேவை. இவையெல்லாம் நிரம்பப் பெற்று வாழ்க்கையில் உயர்வை அடைந்தவர் **பேராசிரியர் ம. சண்முக சுந்தரனார்** அவர்கள் ஆவார்கள்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் எம். ஏ. பட்டம் பெற்ற இவர் முதன் முதலில் முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர்க் குழுவில் சேர்ந்து பதினைந்து ஆண்டுகள் பணியாற்றினார். அங்கிருந்து, தான்கல்வி பயின்ற பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆங்கிலத் துறையில் துணைப்பேராசிரியராகச்சில ஆண்டுகள் பணியாற்றினார். அந்தக் காலத்தில் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிப் பள்ளி (உயர்நிலைப் பள்ளி)யின் தலைவராய்த் தக்கார் ஒருவரை அமைத்துப் பள்ளியின் தலைவராய்த் தக்கார் ஒருவரை அமைத்துப் பள்ளியின் வளர்ச்சிக்கு வழிகோல வேண்டும் என்ற நிலைமை தோன்றியதும் அறநிலையப் பாதுகாவலர்கள் பேராசிரியர் சண்முகசுந்தரனாரை ஆண்டனுப்பி நிலைமைகளைச் சீர்செய்து பள்ளியின் வளர்ச்சிக்குப் பாடுபடுமாறு தலைமையாசிரியராய் அனுப்பினர். அந்தப் பதவியில் ஐந்து ஆண்டுகள் இருந்து பின் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலேயே ஆங்கிலத் துறைப் பேராசிரியராக உயர்த்தப்பட்டு வந்து சேர்ந்தார். அந்தப் பதவியிலிருந்து 1951 - ஆம் ஆண்டு காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராய் வந்திருந்து 1958-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 22-ஆம் நாள் இயற்கை எய்தும்வரை கல்லூரியின் வளர்ச்சியில் தன் உழைப்பைச் செலவிட்டு வந்தார்.

தனிப்பட்ட முறையில் ஆசிரியராக இருந்த ஒருவர் பேராசிரியராகி, கல்லூரித் தலைவராக விளங்கினார் என்பதோடு மட்டுமல்லாமல் அவரிடம் குடிகொண்டு விளங்கிய பல பல பண்புகள் அவரை நன்மணி தராக்கின.

நெடுநாட்களுக்கு முன் பாடங்களைப் பயிற்றும் மொழி தமிழாக இருக்க இயலுமா என்ற ஐயம் இருந்தது. ஆங்கிலத்திற்குத் தான் அந்தத் தகுதி இருக்கிறது, தமிழுக்கு இல்லை எனச் சிலர் வாதிட்டுக் கொண்டிருந்த நேரத்தில், ஆங்கிலப் பேராசிரியராக இருந்த சண்முகசுந்தரனார் உயர்நிலைப் பள்ளிகளுக்கான, வரலாறு சமூகம், விஞ்ஞானம், நிலவியல், ஆகிய துறை நூல்களைத் தாமே தமிழில் புதியதாய் எழுதியும், ஆங்கில நூல்களை மொழி பெயர்த்தும் தமிழில் பயிற்றுதல் தகைவுடைத்தே என நிறுவிக் காட்டினார்.

தமிழ் மொழியினிடத்தில் மிக்க பற்றும், தமிழ் வளர வேண்டும் என்ற பெருவேட்கையும் பேராசிரியர் அவர்களிடத்தில் மிகுந்திருந்தது. தமிழ் இலக்கணத்தைச் சிறுவர் உளங்கொளுமாறு இனிய எளிய நடையில் வினாவிடைகளாக அமைத்து எழுதியதோடு, தமிழ் இலக்கிய உலகில் என்றும் தம் பெயர் நிலைக்குமாறு அரிய பணி ஒன்றினைச் செய்துள்ளார். தமிழ் மொழிக்கு அணி செய்யப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய 'மனோன்மணீயம்' என்ற நூல் செய்யுள் வடிவான் ஆயது. அந்தச் செய்யுள் நூலை பலரும் படித்தறியும் வகையில் அதனை ஒட்டி—அதனையே—உரைநடை நூலாக்கியதன் மூலம் ஒரு நல்ல இலக்கியம் எல்லோர் கைக்கும் எட்டச் செய்திருக்கின்றார்.

> காஞ்சிப் பச்சையப்பன் கல்லூரி முதல்வர் பேராசிரியர் சண்முக சுந்தரனார் 22-1-58 இரவு 10 மணிக்கு இயற்கை எய்தினார். கல்லூரியின் வரலாற்றில் சிறந்த இடத்திற்கு உரியவரான அந்தப் பேராசிரியரின் பண்புகள் சிலவற்றை இக்கட்டுரை கூறுகின்றது.

நூல் எழுதினால் மட்டும் போதாது. எழுதிய நூல்களை அழகுற அச்சிட்டு வெளியிட வேண்டும். அந்தத் துறையிலும் பேராசிரியரின் பணி சென்றிருக்கின்றது. ஆசிரியர்களின் கூட்டு முயற்சியான ஆசிரியர் நூற் பதிப்புக் கழகம் தோன்றக் காரணமாக இருந்தவர் இவரே.

இவ்வாறு பல வகையிலும் சிறப்பியல்புகள் கொண்ட பேராசிரியரோடு நான் கொண்டிருந்த தொடர்புகளை எண்ணிப் பார்க்கின்றபோது அவருடைய ஆற்றல்களை வியந்து பாராட்டுகின்றேன்.

நான் சென்னைப் பச்சையப்பவின் மாணவனாக இருந்தபோது இவரைப்பற்றிக் கேட்ட அளவினன் தான். ஆனால் காஞ்சிபுரம் கல்லூரியில் பணியாற்றத் தொடங்கிய நாள் தொட்டு நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்தமையின் மேலும் பல உண்மைகளை அறிந்தேன.

இளைஞர்களிடம் காணப்படும் சின்னஞ்சிறு திறமையையும் தூண்டி, அதனை வளர்க்கவேண்டும் என்ற பேரவா இவரிடம் குடிகொண்டிருந்தது. மாணவர்கள வெறும் கல்லூரிப் படிப்போடு சொல்லாற்றல் எழுத்தாற்றல் முதலியன பெறுதல் வேண்டும் என விரும்பியவர். அதற்காகத் தன்னாலான வகைகளில் எல்லாம் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிவந்தார்.

எந்தச் செயலையும் எண்ணிய உடனே செய்யத் தொடங்கிவிட மாட்டார். அதைப்பற்றி நன்றாக எண்ணிப் பார்த்து, அதனால் வரும் விளைவுகளை சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வந்து, பின்னரே அதனைச் செயலாக்கத் தொடங்குவார். இதனால் சில நேரங்களில் காலம் தாமதமாவது போல் தோன்றினாலும், அவர் செய்வது எவ்வளவு உறுதியாக நிலைக்கின்றது என்பதனைப் பின்னரே உணர இயலும்.

# வருந்துகிறோம்

நமது நண்பரும், கழகத் தோழரும், வழக்கறிஞரு மான **வி. பி. இராமன்** அவர்களின் அருமைத் தந்தையார் **ஏ. வி. இராமன்** அவர்கள் 30ந் தேதியன்று சென்னையிலுள்ள தனதில்லத்தில் காலமான செய்தி அறிய திடுக்கிட்டோம். நல்லதொரு மகனை, நமக்கும் நாட்டுக்கும் அளித்ததோடு மட்டுமின்றி, பார்ப்பன குலத்தில் பிறந்தும், முற்போக்குக்கு முட்டுக்கட்டை இடாமல், வளரும் புதுமைகளுக்கு வாழ்த்துரைகள் வழங்கிய பெரியவர் அவர். நம்பால் அவர் காட்டிய அன்பும், நல்ல பண்பும், நினைக்க நினைக்க நெஞ்சை உருக்குகிறது. அறிவியக்கம் என்றாலே அஞ்சிடும் பார்ப்பனகுலப் பெரியவர்களுக்கு ஒரு வழி காட்டி எனலாம் அவரை. நண்பர் வி. பி. இராமன், நமது கழகத்தில் ஏற்று வரும் பொறுப்புகள் கண்டு, உள்ளபடியே மன மகிழ்ந்துகிடந்த அவரை, காலம் கொண்டு சென்று விட்டது. கலங்கும் தோழர் இராமனுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் நமது அன்பு கலந்த ஆறுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக எந்தெந்தத் துறைகளில் பாடுபட இயலுமோ அந்தந்தத்துறைகளில் எல்லாம் தன் முயற்சியைச் செலுவிட்டு வந்தார் என்பதனை எண்ணும்போது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்புகின்றது.

அவரிடம் நான் பெருமதிப்பு கொள்ளக் காரணமாக இருந்த ஒரு பண்பு இருக்கிறது. சீர்திருத்த நோக்கமும், புதுமை ஆர்வமும் மிகவும் படைத்தவர் பேராசிரியர் அவர்கள். ஒரு முறை கல்லூரி ஆசிரியர்க் கூட்டத்தில் நடந்த சொற்போரில் மதம் மனிதனின் வளர்ச்சிக்குச் செய்த கேடுகளைப்பற்றி நான் விளக்கிப் பேசினேன். இரண்டொருவர் என்னை மறுத்துப் பேசினர். அவர்களுக்கு நான் விடையிறுக்கும் முன் தலைவராய் இருந்த சண்முக சுந்தரனார் அவர்கள் எழுந்து மதத்தால் இதுவரை மனித சமுதாயம் உற்ற கேடுகளை எடுத்துச் சொல்லி மறுப்பாளர்களுக்கு விடை பகன்று வென்றார். அந்த நேரத்தில் நான் அவரைப்பற்றி எண்ணிய எண்ணங்கள் பல. கல்லூரி முதல்வர் பணியில் இருக்கும் ஒருவர் இவ்வளவு சீர்திருத்த நோக்கம் உடையவராய் இருப்பது எவ்வளவு நல்லது—சிறப்பு—அருமை எனப் பாராட்டிக் கொண்டேன்.

1939-ம் ஆண்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியிலும் பங்குகொண்டு இந்தித் திணிப்பைக் கண்டித்துப பாடுபட்டுவந்த கல்வித் துறையாளர்களின் சண்முகசுந்தரனாரும் ஒருவர். இறுதி வரையில் இந்தி எதிர்ப்பாளராக விளங்கியது பாராட்டக் கூடியதாகும். வெளியில் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடைபெறும் போதெல்லாம் எங்கள் கல்லூரியில் இந்தி எதிர்ப்பு வாதங்கள் நடக்கும். சண்முகசுந்தரனார் முக்கிய பங்குகொண்டு இந்தியை எதிர்ப்பார்.

அவரும் மனிதர்தான். அதனால் சில குறைகள் அவர் வாழ்க்கையில் இருந்திருக்கக்கூடும். ஆனால் அந்தக் குறைகள் எல்லாம் மனதிலே தோன்றிவிட்ட சில எண்ணங்களின் விளைவு என்பதனை அறியவேண்டும். அவரிடம் இருந்த நற்பண்புகளையும், நல்ல எண்ணங்களையும் கணக்கிடும்போது குறைகள் சிலவே. சாவு அந்தக் குறைகளைத் தின்றுவிட்டது. எனவே இன்று அவர் நிறைகள் மட்டுமே காணத்தக்கன.

உழைப்பு, ஊக்கம் உறுதி, தமிழ் ஆர்வம், சீர்திருத்த நோக்கம், புதுமை காணுவதில் ஒரு வேகம் — இவை நிரம்பியிருந்த ஒருவர்தான் மறைந்த பேராசிரியர் சண்முகசுந்தரனார்!

வாழ்க அவர் பெயர்!

"...அமளிகளுக்கும், 2-பேர் உயிர் நீத்ததற்கும் தி. மு. க-வினர் குற்றவாளியா அல்லது சர்க்கார் குற்றவாளியா என்பது தான் இன்றுள்ள கேள்வி. நம்மைப் பொறுத்தவரை, சர்க்கார்தான் இதில் மன்னிக்க முடியாத குற்றத்தை செய்திருக்கிறார்கள் என்று அறிகிறோம். கருப்புக்கொடி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக பொதுக்கூட்டம் நடக்க ஏற்பாடாகி இருந்ததை போலீசார் தடுக்காதிருந்தால் இக் கலவரம் நிச்சயமாகஏற்பட்டிருக்காது. அண்ணாதுரையோ, மற்ற தலைவர்களோ வெளியே இருந்திருந்தால் இந்த அளவுக்கு கலவரம் ஏற்படச் செய்யாது என்பதை குழந்தைகூட அறியும்.

"பேரிகை" 13—1—58

"திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தங்கள் கட்சித் தோழர்களுக்கு அமைதியான முறையில் ஆட்சேபக் கொடிகள் காட்டவேண்டும் என்று வற்புறுத்தவே சென்னைக் கடற்கரையில் கூட்டம் கூட்ட விரும்பியதாகத் தெரிகிறது. ஏற்கனவே நகரில் தடை உத்திரவு இருந்ததால் காரணத்தை விளக்கிக் கூட்டத்துக்கு அனுமதி கோரினார்கள். இது தரப்படவில்லை. உத்திரவை மீறிக் கூட்டம் நடத்துவதற்கும் ஏற்பாடுகள் நடைபெற்றன. சர்க்காருடைய அவிவேகத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டது. தி. மு. க. தலைவர்களைக் கைது செய்துவிட்டு, அந்தக் கட்சி பாமரர்களுக்கு வழி காட்டவும், அமைதியைப் பாதுகாக்கவும் தலைவர்கள் இல்லாமல் செய்துவிட்டார்கள் ..."

"கல்கி" 19—1—58

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.